தென்மொழி

டி: 13.
லை: 1.
இலை
நு: 1.

இருப்பினும் ஒரு கை பார்த்திடலாம்!

எனக்குத் தெரியும், இந்தத் தமிழன்
என்றைக்கும் உருப்பட மாட்டான் என்பது!
தனக்கும் உதவான்; தமிழ்க்கும் உதவான்!
தன்னின நன்மைக்கும் நாட்டுக்கும் உதவான்!
திருப்பம் இலாமல் சென்ற திசையிலே
தேடியும் ஓடியும் தேம்பியுந் திரிவான்!
இருப்பினும் ஒருகை பார்த்திடலாம்; — மன
எழுச்சியை அவன்பால் சேர்த்திடலாம்!

எனக்குத் தெரியும் இந்தத் தமிழன்
என்றைக்கும் திருந்திட மாட்டான் என்பது!
மினுக்கத் தெரிந்துளான்; மெலுக்காய்த் திரிவான்!
மெப்புக்கே உழைப்பான்; உப்புக்கும் அலைவான்;
காயினும் காய்வான்; நனையினும் நனைவான்!
கடுமையாய் உதைப்பார்க்கு அடிமையாய்க் கிடப்பான்!
ஆயினும் ஒருகை பார்த்திடலாம்; — அவன்
அடிமைக் குழியைத் தூர்த்திடலாம்!

எனக்குத் தெரியும் இந்தத் தமிழன்
என்றைக்கும் உரிமையை மீட்கான் என்பது!
மனக்குழப் பத்தினால் மாளினும் மாள்வான்!
மற்றவர் முயற்சியை நம்பவும் மாட்டான்!
தன்னினம் பேணான்; தாய்மொழி பேசான்;
தன்னையே விற்றுத் தன்குடல் வளர்ப்பான்!
என்னினும் ஒருகை பார்த்திடலாம்! — அவன்
ஏற்றத்தில் நறுநீர் வார்த்திடலாம்!

எனக்குத் தெரியும் இந்தத் தமிழன்
இம்மியும் உணர்ந்திட மாட்டான் என்பது!
இனக்கொலை புரிவதில் இவன்பெரும் எத்தன்!
இருப்புக் கோடரிக் காம்புக்குக் கொம்பன்!
நின்றாலும் நிற்பான்; நெடுங்கிடை வீழ்ந்தால்
நெருப்புப் பிடித்தாலும் நெகிழாத வம்பன்!
என்றாலும் ஒருகை பார்த்திடலாம்! — அவன்
இழிவினில் ஒருதுளி தீர்த்திடலாம்!

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

நமக்கு வந்த மடல்கள்.

0 : 489 : பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம்.........காமராசரை முகப்புப் பாடலில் போற்றி அவரின் நற்குண, நற்செயல்களை வடித்துத் தந்த தங்கள் கைகளை வலுப்படுத்துவதே பழைய பேராயக் கட்சியில் இருக்கும் ஒவ்வொருவரின் கடமையாகும். அப்படிச் செய்யாமல் அங்கு ஒட்டிக் கொள்ளலாமா, இல்லை இங்குப் பிளவை ஏற்படுத்தலாமா என நினைப்பது அன்னோரின் மூடத் தனத்தை விளக்கும் முற்றுப் புள்ளியாகும். "இல்லறந் துறந்த நல்லறத் துறவி" என்பதும், இன்னும் அப்பாட்டின் வரிகளும், காமராசரின் வாழ்க்கை வாலாற்றின் முன், வைர ஊசிகளால் தங்க ஏட்டில் பொறிக்கத் தக்கனவாம். நம் செயற்பாட்டைக் குறித்துப் பல்வேறு வகையான மடல்கள் வெளிவந்திருப்பினும், அவை எல்லாம் நம் கொள்கையை நடுவாகக் கொண்டு வந்திருப்பதால் அவையெல்லாம் வரவேற்கத் தக்கனவே. ஓரிரு மடல்கள் மட்டும் தங்களைத் தாக்குவதாக இருப்பது குறித்து, நம்மன்பர்கள் கவலைப்பட்டத் தேவையில்லை. ஏதோ ஒரு சின மிகுதியாலோ, அவர் மேல் கொண்ட பற்றுலோ, அம்மடல்கள் வரையப்பட்டிருக்கலாம். காலப்போக்கில் அவையெல்லாம் சரிப்பட்டுவிடும் என்றே எண்ணுகின்றேன்.

............நம் முயற்சிகளை நான்கு ஆண்டுகள் தள்ளிப் போடுமாறு ஒரு மடல் குரல் கொடுக்கிறது. முடியுமானுல் அந்த மடல் காரர் மட்டும் தம்மை நான்கு ஆண்டுகட்கு விலக்கிக்கொண்டு, செய்வன செய்யட்டும். எல்லார்க்கும் ஒத்த காலம் வருதல் என்பது முயற்கொம்பே என்பதை நம் மெய்யன்பர்கள் நன்கு அறிவார்கள்.

—சி. நா. செந்தமிழ்ச் செல்வன், வேங்கைவாடி.

0 : 490 : அன்பு கெழுமிய ஐயா, தென்மொழிக் கொள்கைகளைத் தெளிவுறத் தாங்கி, சிறகடித்துப் பறக்கும் "தமிழ்ச்சிட்டு", கண்டு பெரிதும் மகிழ்கிறேன். தாங்கள் மூட்டிய உணர்ச்சித் தீ ஒருநாள் சுடர்விட்டு எரியத்தான் போகிறது. ....அதுவரை தங்கள் பணி தொடரட்டும். எழுத்துகள், அன்னைத் தமிழை அரியணை ஏற்ற விழையும் அடலேறுகளுக்கு உணர்ச்சிகளை, ஊட்டுவனவாக அமையட்டும். வாழ்க! தமிழகம்! வளர்க! உங்கள் பணிகள்!

—முருகு. இறைமறவன், சுந்தம்பட்டி, புதுகை.

0 : 491 : "அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னர்
தமரின் தனிமை தலை."

எனும் குறளுக்கு இலக்கணமாய்த் திகழும், ஆசானுக்கு தென்மொழி அன்பன், எழுதுவது. .... தனித் தமிழ் உணர்வுகொண்டு, கொள்கை பேசி, எவ்வினையையும் பகுத்துப் பாராமலும், மெய்ப்பொருள் காணும் ஆய்வு அறிவு இல்லாமலும், தங்களைப் புறங்கூறும் இனம் அல்லன் யான். தென்மொழியோடு, இணைத்துக்கொண்ட தங்களின் நிலைகளைத் தொடக்கத்

—[அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க.]

தொண்டுக்குத்
துணையாக வந்தவர்!

" துன்பம் இருக்கும் :
துணையிருக் காது !
இன்பம் என்பதோ
என்றும் கனவுதான் !
அன்பென்ப தெல்லாம்
அளிக்கின்ற வரையில் !
தென்பெது தெரியுமா,
தேயாத தமிழ்தான் !

—என்ன சொல்கிறீர்?" என்றே, என்னொடும்
தொண்டு செய்திடத் துணிந்துமுன் வந்த
அன்பர் ஒருவர்க்கு அமைதியாய்ச் சொன்னேன் :
"நன்றே வாழ்க, உம் தொண்டு"-எனவாழ்த்தி
நின்றுகொண் டிருந்தவர் நீட்டினர் நடையே !

"உழைப்பே இருக்கும் ;
உறக்கம் இராது !
மழைக்கும் வெயிற்கும்
மனந்தயங் காமல்
அழைக்கும் பணிக்குள்
அமிழ்ந்திடல் வேண்டும் !
பிழைப்பெலாம் செந்தமிழ்ப்
பிழைப்புதான் !"—என்றே,

"என் தமிழ் நாட்டிற்கும் இனத்திற்கும் மொழிக்கும்
என்னுயிர் உடல்பொருள் ஈவேன்" என்று, என்
முன்வந்த ஒருவர்க்கு முழுதும் விளக்கினேன் !
மின்வந்த கண்ணினல் மேல்கீழ் நோக்கியே,
பின்வந்து பார்ப்பதாய்ப் பேசிச்சென் ருரே !

"இகழ்ச்சிகள் இருக்கும் ;
ஏச்சுகள் வருத்தும் !
புகழ்ச்சிவாய் உரைதான் !
புல்லியர் இடர்க்கு
நெகிழ்ச்சி, கூட டாது !
நிலைத்திடல் அரிது !
மகிழ்ச்சி என்பதே
தமிழின் மலர்ச்சிதான் !

—என்று வருகிறீர் ?" என்றே என் தமிழ்த்
தொண்டுக்குத் துணையாய்த் துணிந்துவந் தவர்க்கு
நன்று விளக்கினேன்; "நல்லதென் மனைவிபாற்
சென்று கலந்து வருவேன்"—எனச் சென்றவர்
இன்று வரையிலும் எதிர்வர வில்லையே !

“கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை” எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

[நிறுவனம் தி: பி.1990 (1959)]

சுவடி: 13. ஓலை: 1.

நளி-சிலை-தி. பி. உ00௬-நவ-திசம்பர்.-'1975.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

செய்தித்தாள்களும், வானொலியும், திரைப்படங்களும்.

நம் நாட்டுச் செய்தித் தாள்களைப் பார்க்கும் பொழுது ‘இவை ஒரு தற்கொலை முயற்சி’ என்றே நினைக்கத் தோன்றுகின்றது பெரும்பாலும் நம் நாட்டின் அத்தனைத் தீமைகளுக்கும் கரணியம் இந்நாட்டுச் செய்தித் தாள்களும் வானொலியும் திரைப்படங்களுமே என்றால்கூட அக்கூற்றில் மிகுதியான தவறு இருக்கமுடியாது என்றே கூறலாம். சிறிது ஆழமாக எண்ணிப் பார்த்தால், அவற்றின் பொறுப்புகளை விட போட்டி போட்டுக்கொண்டு நாட்டைக் கெடுக்கின்ற உரிமைகளைத் தாம் அவை மிகுதியும் கருதிச் செயல்படுவனவாகத்தெரிகின்றது. ஒரு வகையில் இந்நெருக்கடி நிலையில் உள்ள செய்தித் தணிக்கை முறை இப்படியே இருக்கலாம் என்றுகூட நாம் எண்ணும்படி அவற்றின் செயல்கள் அமைந்திருப்பதைப் பார்க்க முடிகின்றது. ஆனால் தணிக்கை செய்யப்பெறும் கருத்து நிலையில்தான் இன்னும் சிலவகை மாற்றம் செய்துகொண்டாகல் வேண்டும்!

பொதுவாக ஆட்சியாளர் தம் முயற்சிகளை அரசியல் முயற்சிகள் வாழ்வியல் முயற்சிகள் என்னும் இரண்டு வகையாகப் பகுத்து அமைத்துக் கொள்ளுதல்வேண்டும். இதில் முன்னதில் உரிமை மிகுதியும், பின்னதில் கட்டுப்பாடு மிகுதியும் வரும்படி தணிக்கை முறை

களைச் சீர்ப்படுத்தினால் கட்டாயம் இந்நாட்டு மக்களுக்குப் பெரும் பயன் விளையும் என்பதில் ஐயமே இல்லை. நாம் கூறுவதை இன்னும் சற்று விளக்கமாகச் சொல்வதானால், அரசியல் நடவடிக்கைகளைப் பற்றி யாரும் தாராளமாகக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளலாம் என்றும், வாழ்வியல் நடவடிக்கைகளில் மட்டுமே கட்டுப்பாடு மிகுதியும் இருத்தல் வேண்டும் என்றும் சட்டம் வகுத்துக் கொள்ளலாம். ஆனால் சட்டம் சிலவகைகளில் இதற்கு நேர்மாறாக அமைந்திருக்கின்றதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருவகையில் அரசியல் முயற்சிகளுக்கான உரிமைகள் மிகுந்து நின்றாலும், வாழ்வியல் முயற்சிகளுக்குக்குள்ள கட்டுப்பாடுகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. இந்தக் கோளாறுகளின் அடிப்படையில்தான் நம்நாட்டில் கள்ளக்கடத்தல்களும், கருப்புப்பணங்களும், கொள்ளைகளும், கொலைகளும், கொடுமைகளும் மிகுந்துவிட்டன என்று சொன்னால் அது மிகையான கருத்தாக இருக்கமுடியாது. காற்றுப்போல் கண்ணுக்குப் புலப்படாமல் நடைபெற்று வந்த இந்தத் தீமைகள், கல்லைப்போல் அங்கங்கே குட்டுக் குட்டாக நிற்கத் தொடங்கிய நிலையில்தான் நாம் இவற்றை நன்கு உணரமுடிந்தது. அவற்றின் அடிப்படையில்தான் இப்பொழுதுள்ள நெருக்கடி நிலையும், பிற நடவடிக்கைகளும் நடைபெறவேண்டியனவாகப் போய்விட்டன. முளையிலேயே கிள்ளியெறியத் தவறிவிட்டதால் இப்பொழுது கோடரி போட்டுப் பிளந்து கொண்டு கிடக்கின்றோம். ஆனால் இதற்குமேல் இப்பொழுதுள்ள நிலையில் இக்கருத்துக்கு விளக்கம் அளிக்க இயலாதிருப்பதால் பின் பொரு முறை இதைப்பற்றி மேலும் விரிவாகப் பேசலாம்.

இனி, நாம் கூறவந்த கருத்துப்பற்றி சிலவகை ஏற்றத் தாழ்வு நிலைகளை எண்ணிப் பார்ப்போம். ஆனால் நாம் சொல்லப்போவதை மட்டும் கொஞ்சம் நடுநிலையான உள்ளத்துடனும் பதற்றமில்லாத அறிவுணர்வுடனும், தன்னை அல்லது தங்களை மட்டுமே நினைக்கும் நிலையிலிருந்து மாறிப் பிறரையும் அல்லது இந்நாட்டு மக்களின் நலன்களையும் நினைத்துப் பார்க்கும் இரக்க வுணர்வுடனும் இக்கருத்துகளைப் படிக்கக்கேட்டுக் கொள்கின்றோம்.

ஒருவேளை இந்தக் கருத்துகள் எதிர்காலத்தில் உங்கள் நேரத்தை மிச்சப்படுத்தலாம்; அல்லது நீங்கள் செலவிடப்போகும் பணத்தில் ஒருபகுதியை மீதிப்படுத்தலாம்; அல்லது செய்தித்தாள் படிப்பதனாலோ வானொலி கேட்பதனாலோ. திரைப்படம் பார்ப்பதனாலோ அன்றாடம் உங்களுக்கு ஏற்படுகின்ற மனக் குழப்பங்களிலிருந்து நீங்கள் விடுபடலாம். அதுவுமல்லாமற் போனால், நீங்கள் உங்களுக்

கிருப்பதை மட்டும் வைத்துக்கொண்டு மன மகிழ்ச்சியுடனுகிலும் வாழ்க்கை நடத்த உதவலாம். ஆம்; இவற்றுள் ஏதாவதொரு பயனை நீங்கள் உறுதியாகப்பெறமுடியும். அந்த அளவுக்கு இந்தக்கருத்துகள் எண்ணிப்பார்க்க வேண்டிய இன்றியமையாமை உடையன.

முதலில், நம் நாட்டிலுள்ள செய்தித் தாள்களை எடுத்துக்கொள் வோம். அவற்றல் மக்களுக்கு ஏதாவது உருப்படியான பயன் விளை கின்றதா? ஏதோ ஒருவகையில் அவர்களுக்கு ஒரு பொழுதுபோக் குக்கருவியாக அவை இருப்பதைத் தவிர, அவற்றைப் படிப்பதனுல் மக்கள் நாளுக்கு நாள் அறிவு விளக்கம் பெறுவதாகவோ வாழ்க்கை யில் செப்பம் எய்துவதாகவோ முன்னேற்றம் அடைவதாகவோ சொல்ல முடியுமா? வெறும் பேச்சுக்கு வேண்டுமானுல் நாம் தருக்க மிட்டுக்கொண்டு கிடக்கலாம்; 'செய்தித்தாள் படிப்பது நல்லது: அதனுல் அறிவு வளரும்; உலகம் விளங்கும்' – என்றெல்லாம் வாய் கிழியப் பேசலாம். ஆனுல் கண்ணுக்குக் கண்ணுக, கருத்துக்குக் கருத்தாக இக்காலத்துச் செய்தித் தாள்களைப் படிப்பதனுல் அவை நடந்து வருவதாக நீங்கள் கருதமுடியுமா? எண்ணிப் பார்க்கவேண் டிக்கொள்கின்றேம்; சில செய்தித் தாள்கள் இக் கொள்கைக்கு விலக்காக இருக்கலாம் என்பதைத் தவிர வேறு எந்த முடிவுக்கும் நீங்கள் வரமுடியாது என்றே நாங்கள் நம்புகின்றேம்;

மற்றபடி, நம்நாட்டிலுள்ள ஆங்கிலத்தாள்களும் சரி, தமிழ்த்தாள் களும் சரி ஏறத்தாழ ஒரேவகையாகத்தான் நடைபோடுகின்றன. ஒரு வகையில் ஆங்கிலத்தாள்கள் வெளிநாட்டார் கைகளுக்கும் போகின் றன என்றமுறையில் அவற்றில் அறிவுக்கும் வாழ்வுக்கும் பொருந்தின சில செய்திகள் வெளிவருகின்றனவே தவிர, அவை இங்குள்ள மக்க ளுக்காக மட்டும் வெளியிடப் பெறுமானுல் எப்படியிருக்குமோ சொல்லமுடியாது. மேலும், இப்பொழுதும்கூட அவை வெளிநாட்டுக் கென்று ஒரு பதிப்பும், உள்நாட்டுக்கென்று ஒரு பதிப்பும் வெளியிடு வதிலிருந்தும், அப்படி வெளியிடப்பெறும் செய்திகளில் பெருமளவில் மாற்றம் செய்யப் பெறுவதிலிருந்தும் நம் கருத்தை உண்மை என்று அறியலாம். நாம் அண்மையில் சிங்கை, மலேயகம் சென்றிருந்த பொழுது, இங்கு வெளியிடப்பெறும் குமுதத்தையும், ஆனந்தவிகடனை யும் பார்க்க நேர்ந்தது. தாளில், அச்சு முறையில், செய்தித்தொகுப்பு முறையில் அனைத்திலுமே அந்நாட்டு முன்னேற்ற நிலைகளுக்கு ஏற்ற படி வெளியிடப் பெற்றிருந்ததைக் கண்டு நாம் வியப்படைய நேர்ந் தது. அதுபற்றி அருகில் இருந்த அன்பர்களைக் கேட்கையில், "அவ் வாறில்லாமற்போனுல் அவற்றை இங்கு யாரும்வாங்கமாட்டார்கள்."

என்று சொன்னார்கள். எனவே வெளிநாட்டு மக்களைப்பற்றி-வாணிக நிலையில்-இருக்கும் அக்கறைகூட, இங்குள்ள செய்தித் தாள்களுக்கு நம்நாட்டு மக்களைப்பற்றிக் குழுகாய நிலையில் இல்லை என்பதை ஒப்புக் கொண்டே ஆகல் வேண்டும்.

அதுவும் நம் தமிழ்ச் செய்தித்தாள்களை எடுத்துக்கொண்டால், நாம் உலகச் செய்திகளைத் தெரிந்துகொள்ளவே வாய்ப்பில்லை: இவற்றைப் படிக்கின்ற ஒருவர் வெறும் கிணற்றுத் தவளையாகத்தான் இருக்கவேண்டும். அதுவும் ஒரு கட்சியைச் சார்ந்த தமிழ்த்தாள் என்றால், சொல்லவே வேண்டுவதில்லை; நாம் ஒரு குட்டைத்தவளையே தான்! என்றைக்குமே அவற்றால் நல்லறிவு பெறமுடியாது. நாம் ஏற்கனவே-அஃதாவது நம் மாணவப்பருவத்தில்-இன்னுஞ்சொன்னால்-நாம் கட்சிகளில் சேர்வதற்கு முன்பு-பெற்றுக்கொண்ட அறிவுதான். அதற்குப்பின் நாம் அந்தச் செய்தித்தாள்களைப் படித்து நாம் வளர்த்துக்கொண்டவை, கட்சிவெறி, போலிப்பெருமை, ஆரவார நடைமுறை, அலுக்கு மினுக்கு, இறுதியில் எப்படியாகிலும் வயிற்றுக்குச் சோறு என்ற உணர்வு-இவைதாம். (அருள் கனிந்து மூக்கு வெயர்க்காமல் மேலே படிக்கக் கேட்டுக் கொள்கின்றோம்.)

மற்றபடி, இந்தத் தமிழ்த் தாள்களைப் படிப்பதால் எந்தவகையில் நமக்கு அறிவு வந்துவிட்டதாக நாம் கருதிப் பெருமைபெற முடியும்? ஒருவேளை இவற்றைப் படிப்பதால் மனமகிழ்ச்சிதான் ஏற்படுவதாக யாராவது கருதமுடியுமா? வேண்டுமானால் அவற்றின் விளம்பரங்களில் வரும் பெண்ணுருவங்களின் எடுப்பானதோற்றங்கள் மட்டும் அவற்றைப் படிப்பவர்களுக்கு ஒரு 'புல்லிய' மனக்கிளர்ச்சியை உண்டாக்குவதாகச் சிலர் நினைக்கலாம். அதையும் மனமகிழ்ச்சி என்று சொல்லமுடியாது. இப்படி அறிவுக்கோ, மன வளர்ச்சிக்கோ ஒரு வகையிலும் பயன்படாத செய்தித்தாள்களில் என்னதான் இருக்கின்றது என்பதை ஒருமுறை-ஒரேமுறை-நாம் எண்ணிப் பார்த்ததுண்டா?

கூடியமட்டில், நாம் கொடுக்கும் காசில் ஒரு பகுதியை வீணான-நமக்குத் தேவையில்லாத-ஆரவாரமான போலி நாகரிகப் பொருள்களைப்பற்றிய விளம்பரங்களைப் படிப்பதற்கே செலவிடுகின்றோம். இந்த விளம்பரங்கள் எவரும் எட்டிப் பார்க்காத கனவுலகத்திற்கே நம்மைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகின்றன. அல்லது நம்மைத் தாங்கமுடியாத அளவுக்குக் கடனாளியாக்கிப் பள்ளம் படுகுழிகளில் கொண்டுபோய்த் தள்ளுகின்றன என்பதை, அவற்றைப் படிக்கின்ற மயக்கத்திலிருக்கும் பலரால் உணர்ந்துகொள்ள முடிவதில்லை.

இத்தகைய வேண்டாத விளம்பரங்களே நம் செய்தித்தாள்களின் பெரும்பகுதிப் பக்கங்களை அடைத்துக்கொண்டு கிடக்கையில், இடையில் உள்ள ஓரிரு செய்திகளைப் படித்தோமென்றால், அவை வெறும் திருட்டுப்பற்றிய விளக்கங்கள், வம்பு வழக்குகள், வீண் அடிதடிகள், கற்பழிப்புகள், கொள்ளைகொடுமைகள், பஞ்சத்தில் மக்கள்படும் துயரங்கள் நாடுகளின் சண்டை சள்ளுகள்-முதலிய நம் உள்ளத்தையும் அறிவையும் வீணான அச்சத்திலும் வருத்தத்திலும், ஏமாற்றத்திலும், கொடுமைகளிலும் உட்படுத்தும்செய்திகளாகவே இருக்கும். இவற்றை நாம் தெரிந்துகொண்டு என்ன பயனைப் பெறப்போகின்றோம் என்று ஒரு சிறிது நேரம் எண்ணிப்பாருங்கள். அதுவும் செய்தித்தாள் வகையில் பேரெண்ணிக்கையில் ஆரவாரத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் மூன்றாந்தர நாலாந்தரத் தாள்களையெடுத்துக்கொண்டாலோ, சொல்லவே வேண்டுவதில்லை. அவற்றால் பிழைக்கும் கள்ளக் கடத்தல்காரர்களும், கருப்புப் பண முதலைகளும், ஆரவாரமான முறையில் பல மாளிகைக் கட்டடங்களில் அரச வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் கொள்ளை ஊதியக் கொடுமையாளர்களும் எத்தனையெத்தனைப்பேர் என்னும் கணக்குகள் நம் அரசு அதிகாரிகளுக்குத் தெரியாமலா போய்விடும்?

இனி, கட்சியிதழ்கள் என்றாலோ இன்னமும் சொல்லவேண்டுவதில்லை. உறுப்பினர்களின் கட்சித் தாவல்களிலிருந்து – அவர்களின் உளறல் அறிக்கைகள், பெரும் மேதைத்தனமான விளக்கங்கள், கண்டுபிடிப்புகள், கட்சிக்குள் உள்ள அடிதடிகள், கெடுபிடிகள், மிரட்டல் உருட்டல்கள், இவற்றிற்கிடையில் அவ்விதழ் விரும்பும் கட்சியணியின் தலைவர்களின் புகைப்படங்களைப் பெரிய அளவிலும் சிறிய அளவிலும் நின்றதுபோலும், நடப்பதுபோலும், படுத்தது போலும், தோள்மேல் கைபோட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பது போலும், பாதியளவில் வாயைத் திறந்துகொண்டு சிரிப்பதுபோலும், ஏதோ எண்ணிக்கொண்டு எங்கேயோ பார்த்துக்கொண்டிருப்பது போலும்—ஆகிய பலவாறான சாயல்களில் எடுத்துப் பக்கத்துக்குப் பக்கம் பத்திக்குப் பத்தி அச்சுப்போட்டு, ஆரவாரப்படுத்தி யிருப்பதைத் தவிர வேறு எதனையும் பார்க்க முடியாது. இவை சிறுபிள்ளைகள் தங்களுக்குக் கிடைக்கும் கதைப் பொத்தகங்கள், பழைய பாடப் பொத்தகங்கள் முதலியவற்றில் உள்ள அச்சுப் படங்களையும் வண்ணப்படங்களையும் வெட்டி ஒட்டி வைத்துக்கொண்டு அடிக்கடிபார்த்து மகிழ்வதைப்போல் வெறும் வேடிக்கை மனமுடைய வாடிக்கைக்கட்சியாளர்கள் பார்த்துப் பார்த்து மகிழ்ந்துகொண்டு கிடக்கலாமேயன்றி அறிவுணர்வுள்ளவர்களோ, எதிர்காலத்தில் இந்த நாட்டின் சிறந்த

குடிமக்களாகவும், அறிவியல் அறிஞர்களாகவும் அரசியல் அறிஞர்களாகவும் வரப்போகும் இளைஞர்களோ அவற்றை வாங்கிப்படித்து என்ன பயனைப் பெற்றுவிடமுடியும்? நாம் சிங்கை மலையாவிலிருந்த மூன்றுமாதக் காலத்திலும் அங்குள்ள கட்சித் தலைவர்கள் எவர் எவர் என்ன பேசுகின்றார், என்ன கருத்தறிவிக்கின்றார் என்பதைப் பற்றி ஒருநாளாகிலும் ஒரு செய்தித்தாளிலாகிலும் பார்க்கவோ படிக்கவோ முடியவில்லை. அந்த நாட்டுத் தலைமையமைச்சரைப் பற்றிய வகையிலும்கூட அந்த நிலைதான். அவரவர்கள் செய்கின்ற செயல்களைப்பற்றித்தான் அங்குச் செய்திகள் மிகுதியாக வந்தன. இங்கு நினைப்பதை யெல்லாம் செய்திகளாகவும் நடக்கப்போவதை யெல்லாம் நடந்தவைகளாகவும், சொல்லிப் பெருமைப்படும் பழக்கம் அளவுக்கு மீறி வளர்ந்திருப்பதை இங்குள்ள செய்தித்தாள்களே மெய்ப்பித்துக் கொண்டுள்ளன.

இனி, இன்னொன்றை மிக முகாமையாகக் குறிப்பிட்டேயாகல் வேண்டும். நம் செய்தித் தாள்களில் முதல்நாள் ஒரு செய்தி வரும். அடுத்தநாள் அது பொய்யென்று செய்திவரும். வெளிவரும் செய்திகளும் அவற்றை எழுதுகின்றவரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பத் திரிக்கப்பெற்றோ சுருக்கப்பெற்றோ மறைக்கப்பெற்றோதாம் வெளியிடப் பெற்றிருக்கும். நடுநிலை உள்ளமுடைய ஒருவர் இவற்றால் மனக்குழப்பம் அடைவதைத்தவிர வேறு பயன் பெறமுடியாது. தம் தம் கட்சிச் செய்திகளையே பெரிதுபடுத்தித் தம்தம் தலைவர்களையே வானளாவ இந்திரன் என்றும் சந்திரன் என்றும் புகழ்பாடுகின்ற கைக்கூலிகளையே அவை பெரிதும் ஆசிரியர்களாகவோ செய்தியாளர்களாகவோ கொண்டிருப்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. தமிழ்நாட்டில் இந்த மானக்கேடுகள் மிகவும் அதிகம். இங்கு வெளிவரும் கட்சித் தாள்களை நடத்தக்கூட இங்குள்ள தலைவர்கள் அறிந்திருக்கவில்லை. பெரியார் ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுக்குமேல் இந்த நாட்டு மக்களைப்பற்றிக் கவலைப்பட்டுத் திரிந்தார். அவரால்கூட ஒரு நடுநிலையான செய்தித்தாளை உருவாக்கி வெளியிடமுடியவில்லை என்பது அவருக்கும் அவர் கொள்கைகளுக்கும் ஏற்பட்ட பெரிய இழுக்கும் இழப்பும் மானக்கேடுமாகும். இப்பொழுதுங்கூட இங்குள்ள ஆளுங்கட்சியாக உள்ள தி. மு. க.-வினரால்கூட ஒரு நடுநிலையான, மக்களை உருவாக்கும் அளவில், அவர்களுக்கு நன்மை விளைகின்றவகையில் ஒரு செய்தித்தாளை உருவாக்கிக்காட்ட முடியவில்லை என்பதே அவர்களின் வலிவின்மையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சியாகக் கருதலாம். இவ்வகையில் இங்குள்ள பார்ப்பனர்கள் நடத்துகின்ற செய்தித்

தாள்களை எத்தனையோ நிலைகளில் மெச்சிப் பாராட்ட வேண்டியிருக்கின்றது.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக வாய்கிழியப் பேசும் நம் தலைவர்கள் நடத்துகின்ற செய்தித் தாள்களில் எழுதப்பெறும் தமிழ் உரைகளைப் படித்துவிட்டு நாம் தற்கொலை செய்து கொள்ளலாமா என்றுகூட எண்ணத் தோன்றுகின்றது. அத்தனை எழுத்துப்பிழைகள், சொற் பிழைகள், தொடர்ப்பிழைகள் அவற்றில் சந்தைக்கடைகளில் குப்பைகள் மலிந்திருப்பதைப்போல் மலிந்து நாறுகின்றன. ஒருமை பன்மை எழுவாய்களுக்கேற்ற பயனிலை முடிபுகள், எளிய இலக்கண மரபுகள்கூட அவற்றை நடத்துபவர்களுக்குத் தெரிவதில்லை. இத்தகைய இவர்கள் தமிழ் வளர்ச்சிக்காகக் கச்சை கட்டிக்கொண்டு நிற்பதைப் பார்த்தால், குப்பைமேடேறிக் கோழி பிடிக்கத் தெரியாத குப்பன் வானம் ஏறி வைகுந்தம் காட்டப் போகின்றானாம் என்றே எண்ணிச் சிரிக்கவேண்டி யிருப்பதுடன் இரங்கவும் வேண்டியிருக்கின்றது. பெரும்பாலும், மொழிக் கலப்பையே தம் உயிர்மூச்சாகக் கொண்டு சமசுக்கிருதம் இன்றித் தமிழில்லை என்று காட்டவேண்டி, விடாப் பிடியாகக் கலப்புமொழியால் எழுதுவதையே பேரின்பமாக எண்ணிக் கடைப்பிடிக்கும் பார்ப்பன இதழ்கள்கூட, தாம் எழுதுகின்ற மொழிநடையில் பிழைகள் வரும்படி எழுதுவதில்லை. அத்திம்பேர் அம்மாமீத் தமிழைக்கூட இலக்கணப்பிழைகள் வராமல் எழுதி மொழி மரபைக் காக்கின்றன. அவர்களுக்கிருக்கும் அக்கறையில் பத்திலொரு பங்குக்கூட உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு என்று பறையார்த்து முழக்குகின்ற நம் தமிழ்த் தாள்களுக்கு இருப்பதில்லை. இப்படி எவரேனும் சொல்லிவிட்டால் மட்டும் கருநாகம்போல் சொன்னவர்மேல் சீறிப்பாய்கின்றனவே தவிர, அவர்கள் சொன்ன கருத்தில் என்ன உண்மையிருக்கின்றது என்று ஆராய்ந்து பார்க்கும் அடிப்படை அறிவுகூட அவற்றிற்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் எப்படியோ அவை புளுகுணித் தனமான விளம்பரங்களாலும் பொய்ச் செய்திகளாலும் பொழுதைக்கொன்று வயிற்றைக் கழுவி வருகின்றன என்பதை வருத்தத்துடன் குறிப்பிட்டே ஆகவேண்டியுள்ளது.

—தொடரும்.



உள்ளே — ஆசிரியரின் பழைய இலக்கிய நினைவுகள் சிலவற்றைச் சுவையுங்கள்!

குழந்தை பிறந்த செய்தியை வெளியூரில் உள்ள தன் அத்தானுக்குத் தெரிவித்து அவனை உடனே வரச்சொல்லி, பூரிப்புடன் எழுதுகின்றாள் இளம் மனைவி! —1955-இல் தென்றலில் எழுதியது இப்பாடல்!

வா'ங்க' அத்தான்!

அத்தான்! என் உள்ளத்தில் பொங்கும் ஆசை
அத்தனையும் உள்ளடக்கிக் கூறு கின்றேன்:
தித்திக்கும் ஒருசெய்தி! நீங்கள் தந்த
தெவிட்டாத இன்பத்தின் விளைவே! ஆமாம்;
முத்துக்கும் ஒளியில்லை என்னு மாறு
மொய்விழிகள்! சிறியநுதல்! இன்ப வெள்ளம்!
ஒத்திருக்கும் உங்கள்உரு; ஆமாம் அத்தான்!
உணர்ந்தீரா யாரென்றே? நம்மின் செல்வம்.

போங்க'த்தான்! உங்கட்குப் புரிய வில்லை!
பிறந்துவிட்டான் உங்கள்மகன்! அவனைக் காண
வாங்க'த்தான்! வார்த்தெடுத்த தங்கப் பாவை!
வைத்தகண் வாங்காமல் எனைப்பார்ப் பீரே;
நீங்கத்தான் விடுவீரா? அதுபோல் என்னை
நீலவிழி எடுக்காமல் நோக்கு கின்றான்!
ஏங்க'த்தான்! அசையாமல் இருக்கின் றீர்கள்?
எடுத்தடியை வையுங்கள்! இருப்பீர் இங்கே!

பூத்திருக்கும் அழகுமலர் தன்மேல் மொய்க்கும்,
புதுவிழிகள்! எனக்காக, அத்தான் நீங்கள்,
காத்திருக்கும் வகைபோலக் கோவை வாயைக்
காட்டியவா றெப்போதும் துடித்து நிற்பான்!
ஆர்த்திருக்கும் இருகையும், காலும், வாயும்!
அப்படியே உங்களைத்தான் ஒத்தி ருக்கும்,
பார்த்திருக்கும் போதெல்லாம் உங்கள் எண்ணம்
பறந்துவிடும். ஆனாலும் அண்டும் மீண்டும்!

இன்னொன்று கேளுங்கள் அத்தான்! என்னை
இடையிடையே மறந்தபடி அமைதி பூண்டே
இன்னொன்றைத் தேடுகின்றான்! நேற்றே என்தாய்
இதைச்சொன்னாள்! உங்களைத்தான் தேடு வானும்!
'தின்'னென்று கன்னத்தைக் கனிவாய் தன்னைத்
தருவானும் உங்கட்கே! சொன்னான் என்பால்!
பின்னென்ன, வாருங்கள் அத்தான்; உங்கள்
பையனையே கொஞ்சுங்கள்; வேண்டாம் என்னை!

எனக்குத்தான் உரிமைஎன்பேன்; நேற்று வந்த
இன்னொருவன் தனக்குரிமை என்பான்; ஆனால்
சினக்கத்தான் துணிவேனோ? பால்ம ணக்கும்
சிறுவாயை அழகுபெறக் கூட்டி, என்றும்
இனிக்கின்ற தமிழ்மொழியால் "அப்பா" வென்றே
இயம்புகையில், அத்தான், நான் மகிழ்ந்து போவேன்;
தனிக்குன்றச் செந்தோளைக் காட்டு தற்குத்
தடம்பார்த்துக் கிடக்கின்றேன்! —இங்ஙன், கிள்ளை

*வறுமையுடன் போராடி, இலக்கியத்தில்
ஊடாடிய காலம் அது! அதன் ஒருநாள்
நிகழ்ச்சி இது! 1951-இல் முகிழ்த்த இப்பாடல்
1956, நவம்பரில் முல்லையில் மலர்ந்தது!
இங்குச் சில திருத்தங்களுடன் வெளியிடப் பெறுகிறது.*

விளைந்த பாடல்!

என்னை எழுதென்றே என்னுளத்தி லோருணர்வு
பின்னலிடுங் காலை பெருந்தூவல் தாளுமெடுத்(து)
ஆழ்ந்த நினைவோ டமர்ந்திருக்க என்மனைவி
வாழ்ந்த கதைபாடி வாழ்நிலையைப் பாட
எதிர்வந்து பலவா றியம்பிப் புலம்பிச்
சதிராடி நின்றென் செவிவருந்தச் சொன்னாள் :

''அரிசியில்லை என்றேனே ; ஆர்கேட்டார்? வாய்க்கோர்
'உருசியுள்ள பண்டமென ஒன்றுண்டா? மேலுக்கோர்
சட்டைத் துணியில்லை ; நேர்வீட்டுக் காரியிடம்
கட்டையொன்று கேட்டுக் 'கணக்குவைத்துக் கொள்'-என்றேன்!
'வாங்கியுள்ள கட்டை வருவதற்குள் வல்லுயிரைத்
தாங்கியுள்ள கட்டையுடல் தான்வேகும்' என்றாள்!
குடிக்கூலிக் காரன் கொடுஞ்சினத்தோ டென்னை
நடைக்கூலி கேட்டான். 'நாலுழக்குப் பால்தந்த
பின்என்றன் மாடுமிங்குப் போட்டதிரு கன்'றென்றே
சொன்னான், தெருவதிரப் பால்காரச் சொக்கன்.
எருவாட்டிக் காரியுந்தான் இன்றுவந்தாள் ; 'அம்மா
'மருவாதி' பார்க்கின்றேன் ; அல்லால் எருவாட்டி
வெந்தபணம் தேடாமல் வீடுவந்து சேரு'மென்றாள்.
முந்தாநாள் வாய்கிழிந்த மோர்க்காரி இன்றுவந்தே,
'இந்தாம்மா, கத்திக் கடைவாய் கிழிந்ததினி
இல்லையென்று கூறுகின்ற வாய்கிழிப்பேன்' என்றபடி,
கூரை கிழிவதுபோல் கூத்தாடிப் பின்சென்றாள்.
ஆரைப் பணிந்துபோ என்றுரைப்பேன் ; நாளொன்று ?

காலை எழுச்சி கடன்காரன் பாடுகின்றான் ;
மாலை விழுந்தாலோ மாப்பாடல் பேசுகின்றீர் !
அப்பப்பா ! நானென்ன ஆளா ? அடிபோன
கொப்பா ? குரங்கா ? குமரிப்பெண் தானே !

பொறுப்பேனா ? மற்றவரைப் போல்தானே நானும் !
இருக்காதா ஆசை ? இருந்துநான் பெற்றதென்ன ?
உங்களுக்கு நான்மனைவி என்னும்பேர் ஒன்றல்லால்
பொங்கலுக்குப் பொங்கலன் றாகிலுமோர் புத்தாடை
கண்டேனா ? இல்லையே ! காரம் இனிப்பெனவே
உண்டேனா ? இல்லையே ! ஊரார் உணராரா ?

பூக்காரி வந்தாலோ 'போபோபோ' என்கின்றீர் !
பாக்குக்கும் வெற்றிலைக்கும் பாழுமனம் பட்டேனா ?
தாய்கொடுத்த சேலை ! திருமணத்தில் !! வந்துபோய்
ஆயிற்றா றைந்தாண்(டு) ; அதிலுமறு நூறுபொத்தல் !
நானென்ன கேட்க ? நகைநட்டா ? பட்டுடையா ?
ஊணுண்ண மாட்டாமல் ஓரிரண்டு நாளா ?

உயிருடலைத் தின்றூசல் ஆடுகின்றோம்; நீங்கள்
அயர்வின்றி எப்பொழுதும் அன்பொழுகும் சொல்கூட்டிக்
காதலென்றும் வீரமென்றும் தீட்டுகின்றீர் செம்பாடல் !

ஊதற் குளிர்காற்றால் ஒட்டும் உடம்புக்குப்
பாட்டென்ன ? இன்றே புறப்படுங்கள் என்னோடே !
தேட்டமுடன் வாழ்ந்துநாம் தேர்ந்தபணி செய்தே
பிழைப்ப'மெனத் தூவலுந் தாளும் பிடுங்கிப்
பழையதுணி தன்னைப் பிடித்துக் கிழிப்பதுபோல்
தாளைக் கிழித்துத் தரையையென் தூவலினால்
ஆழ உழுதாள் ! அதிலதனைப் போட்டு
விதைத்தாள்போல் மூடியளாய் வெற்றி முழக்கோடே
'ததைத்தா'வென் றாடிநின்றாள் ; 'தாளிலுள்ள பாடல்
முளைத்தாலும் நன்கு முளைக்கட்டும் ; பின்பு
கிளைத்தாலும் நீண்டு கிளைக்கட்டும்' என்றென்னைக்
கூட்டிச்சென் றாள் ;என்றன் கூடுமேட்டுந் தான்செல்ல
நாட்டிச்சென் றேனிதனை நான் !

பிறக்கும்போதே 'சாதி'யும் பிறக்கிறது!
அது நம் பிழையா? பிறப்பின் பிழையா?
தாயொருத்தி எழுந்து நின்று கேட்கிருள்!
உங்களால் விடை சொல்ல முடியுமா?
1957–இல் தீட்டிய இவ் ஓவியம்
1958–இல் பாவேந்தரின் குயிலில் முழங்கியது!

பிறப்பொக்கும்

பிள்ளை பிறந்தது; பிறக்கும் போதே
கொள்ளை அழகதன் கூடப் பிறந்ததே!
உறுப்புகள் யாவும் அதனுடன் பிறந்தன.
கறுப்பு நிறமும் கூடவே பிறந்தது.

மற்றவர் பெற்ற மருத்துவ மனையில்தான்,
பெற்றெடுத் தாளதைப் பெற்ற பொற்றெடி!
"பிறந்தது ஆணு பெண்ணு" என்றனர்;
அரும்பெரும் மகிழ்வோ "டாணே" என்ருள்.

"அச்செலாம் உன்போல்" என்றனர்; அதன்பின்
உச்சி குளிர்ந்தாள்; உவகை வழிந்தது.
"பிறந்த குழந்தையின் பிறப்பென்ன" என்றனர்.
"பிறந்தது மாந்தப் பிறப்பே" என்ருள்.

"குழந்தையின் குலத்தைக் கேட்டோம்" என்றனர்
"பழந்தமிழ்க் குல"மெனப் பாவை மொழிந்தாள்
"அப்படி என்ருல் அதுவென்ன சாதி?"–
இப்படிக் கேட்கவே எழுந்தாள் நங்கை;

"கண்ணெடு பிறந்தது! காதொடு பிறந்ததே!
உண்ணும் வாயொடும் உடலொடும் பிறந்ததே;
கலத்தொடு பிறந்தது; நானறிய எந்தக்
குலத்தொடும் பிறக்கிலை; குணத்தொடும் பிறக்கிலை;

தூய்மை உடலொடும் தூய்மை அறிவொடும்
தூய்மை உளத்தொடும் தோன்றிய குழந்தைக்கு
ஏது சாதி? இழிவுயர் வெல்லாம்?
தீதிலாப் பிறப்பைத் தீப்பிறப் பாக்குறீர்!"
என்று மொழிந்தாள் ஏந்திழை;
நின்று கேட்டவர் நீட்டினர் விரைந்தே!

எத்தனையோ பேசுகின்றோம்!
கண்முன்னால் ஓர் ஏழை துடிக்கையில்
உதவுகின்றோமா? இம் மனப்புழுக்கத்தால்
எழுந்த இப்பாடல் 1950-இல் மலர்ந்து
சனவரி 57-ல் முல்லையில் மணந்தது!

சாலையின் ஓரத்திலே

சாலையின் ஓரத்திலே — ஓடுஞ்
　　சாக்கடை நாற்றம்என் மூக்கைத் துளைத்திட
காலைவி ரைந்துவைத்தேன் — இரு
　　கண்களி ழந்தவன் மண்ணிற் புரண்டனன்!
மாலைப் பொழுதெனவே — பெரும்
　　மக்கள் குழாம் இரு பக்கத்திலும், கடும்
வேலை முடித்தவகை — என
　　வீடு திரும்பிய வாறிருந்தார்! — அந்தச்
　　சாலையின் ஓரத்திலே!

தொண்டை கிழியும்வகை — அந்த
　　நொள்ளையன், 'கஞ்சியும் இல்லை இல்லை' என
மண்டை உடைத் தழுதான் — அவன்
　　மாளாத சொற்களைக் கேளாத வாறுக,
அண்டை நடப்போ ரெலாம் — உடல்
　　ஆட்டுவதும் பல்லைக் காட்டுவதும், எனக்
கண்டுங் காணுதவர் போல் — போய்க்
　　கொண்டிருந் தாரதைக் கண்டு நின்றேன்!— அந்தச்
　　சாலையின் ஓரத்திலே!

பட்டில் உடை உடுத்தி — இரு
　　பாவைய ரோடெழில் மேவிச் சிரிப்பதும்,
வட்டிக் கணக்கை எண்ணி — உள்ளம்
　　வாங்குவதும், உடல் வீங்குவதும், பணப்
பெட்டியின் திறவுக் கொத்தைத் — தொட்டுப்
　　பார்ப்பதுவும், இன்பம் சேர்ப்பதுவும், குடை
தட்டி நடப்பது மாய்ப் — பலர்
　　சென்றிருந்தார் அதை நின்றுகண்டேன்! — அந்தச்
　　சாலையின் ஓரத்திலே!

ஓடும் இயங்கி செல்லும் — இன்ப
ஊர்தி செல்லும் பல பேர் அங்குச் சென்றனர்.
ஏடு படித்த வரும் — சில
எத்தர்களும் பணப் பித்தர்களும், இந்த
நாடு திருந்து தற்கே — பல
நாட்டங்களை, மக்கள் கூட்டத்திலே சொல்லிப்
'பாடு படுங்க' ளென — நன்கு
பேசியரும் கைகள் வீசிச்சென்ருர் ! — அந்தச்
சாலையின் ஓரத்திலே !

உண்டி செரிப்பதற்கே — வழி
ஒன்றினை யெண்ணியே சென்றவரும், இளம்
பெண்டி ரெலா முடலைப் — பற்றிப்
பேசுவதும், எழில் வீசுவதும், புதுச்
செண்டு மலரணிந்து — குழற்
சீவி முடிந்ததை நீவிச்செல் வாரிதைக்
கண்டுளம் வெந்து நின்றேன் — அந்தக்
குருடனைச் சென்ருரில் ஒருவரும் காணுரே !
சாலையின் ஓரத்திலே !

கத்திப் புரண்டழுதான் — ஒரு
காசு கொடுப்பவர் யாருமில்லை ; பலர்
செத்துக் கொண்டே யிருக்க — சிலர்
செல்வத்தினை, அதன் இன்பத்தினை என்றும்,
எத்தித் திருடுவதேன் ? — இதை
ஏனென்று கேட்டிட, நானென்று நிற்பவர்
பத்தி லொருவ ருண்டோ ? — எனப்
பார்த்திருந் தேன் ; உளம் ஆர்த்துநின்றேன் !–அந்தச்
சாலையின் ஓரத்திலே !

அன்பர்களுக்கு !

'நூருசிரியம்' 'சிங்கைச் செலவு' முதலிய வழக்கமான பகுதிகளும், என் இயக்கம்பற்றிச் சில விளக்கங்கள், அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவுக் கட்டுரை முதலிய பகுதிகளும், அடுத்த இதழ் முதல் தொடரும்.

நம் புற வாழ்க்கை பலவகையிலும்
விரிவடைந்துள்ளது. ஆனாலும்,
நம் உள்ளமும் பண்பாடும் விரிவடைந்தனவா ?
இல்லையே—என்று மருகுகின்றது உள்ளம்.
1957–ஏப்பிரலில் முல்லையில் மலர்ந்து மணம் பரப்பியது இப் பாடல் !

வாழ்வும் தாழ்வும்!

விண்ணை அளந்திடும் வல்லவர் – தொலை
வெங்கதிர் தோற்ற முணர்ந்தவர் – இந்த
மண்ணை அழித்திடக் கற்றவர் – வான
மாவெளி ஊர்ந்திடும் மேதையர் – பொருள்
வண்ண மறித்தவர் மக்களின் – உயிர்
மாய்தலை வெல்ல முயல்பவர் – என
எண்ணத் தொலைவிலர் தோன்றினும் – மன
ஏற்றத்தில் யாவரும் தாழ்கின்றார் !

ஊர்ந்தவர் வானில் பறக்கின்றார் – விலங்
கொத்தவர் நல்லுடை சேர்க்கின்றார் – மடஞ்
சேர்ந்தவர் யாவரும் கற்கின்றார் – பிணி
சோர்ந்தவர் நோயினை வெல்கின்றார் – பணி
தேர்ந்தவர் இவ்வுல குய்யவே – உயிர்த்
தேவைகள் காண்பவர் ஆயினும் – கடல்
ஆர்ந்த உலகினில் எங்கணும் – மக்கள்
அன்பிலும் ; பண்பிலும் தாழ்கின்றார் !

சேற்றைக் குழப்பிக் குடில்களைப் – பண்டு
செய்துயிர் வாழ்ந்த வழியினர் – விண்
காற்றை வளைப்பவர் போலவே – பல
கட்டுகின் றார்மனை வாழவே ! – சுனை
ஊற்றுகள் தேடிக் குடித்தவர் – குழல்
ஊன்றிநீ ரோட்டங் கொணர்கின்றார் – பல
மாற்றங்கள் காண்கின்றார் ஆயினும் – உள
மாண்பினில் யாவரும் தாழ்கின்றார் !

'அன்பின் விளைநிலம்' ஆருயிர் - தரும்
'ஆக்கம்' எனத்தகும் பெண்டிரும் – பெருந்
தென்புகள் கொண்டனர் போல்வராய் – உளத்
தாய்மையை, மென்மையை நீக்கியே – பல
வன்பணி யாற்றப் புகுந்தனர் – அன்பு
வாழ்வைத் துறந்தனர்! ஐயகோ! – உள
அன்பினி எங்ஙனம் வாழ்ந்திடும்? – மன
ஆற்றலில் யாவரும் தாழ்ந்திடின்!

வேற்றுல காக்கினும் ஆக்கலாம்! – வான
வெளியினை வீழ்த்தினும் வீழ்த்தலாம் – உயிர்க்
காற்றுக் குறையினும் ஊதலாம்! – கடற்
கொள்புனல் வற்றினும் ஊற்றலாம்! – மலர்
தோற்றத்தைச் செய்யினும் செய்யலாம்! – அதில்
தேனினைக் கூட்டிடல் ஆகுமோ? – அறி(வு)
ஆற்றல்மிகப் பெரு மாட்சியே! – அன்
பாற்ற லிலாவிடில் வீழ்ச்சியே!

தென்மொழி, தமிழ்ச்சிட்டு - ஆகிய இதழ்களின் முந்தைய வெளியீடுகள் பற்றிய சில திருத்தங்கள்

தென்மொழி சுவடி 12, ஓலை 9-உடன் இடைநின்றபின் அதற்குப் பகரமாக வெளியிட்ட தமிழ்ச்சிட்டு வெளியீடுகளைக் கீழ்வருமாறு திருத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கின்றோம்:

தமிழ்ச்சிட்டு குரல் 8-இன் 8-10, 11, 12 ஆகிய மூன்று இசைகளையும், தென்மொழி சுவடி 12-இன் ஓலைகள் 10, 11, 12 ஆகவும், தமிழ்ச்சிட்டின் அம் மூன்று வெளியீடுகளையும் இடை நீக்கிய இதழ்களாகவும் கருதிக்கொள்ள வேண்டுகின்றோம்.

தென்மொழி சுவடி 13, ஓலை 1 - இலிருந்தும், தமிழ்ச்சிட்டு குரல் 9, இசை 1-இலிருந்தும் இனித்தொடர்ந்து வெளிவரும் என்பதை அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு உறுப்பினர்களின் கணக்கும், முகவர்களின் பட்டியல் கணக்கும், அம் முறைப்படி மீண்டும் தனித் தனிக் கணக்கிற்குக் கொண்டுவரப்பெற்று, நடைமுறைப்படுத்தப் பெற்றன என்பதையும் அன்பர்கள் அறியவும்.

—அமைச்சர்.

த. சி. குரல் 8, இசை 12-இன் தொடர்ச்சி : 3-ஆம் தொடர்.

"தமிழை வளர்ப்பதெப்படி?"

(பழையதொரு நூல்.)

தந்துதவியவர் :

—புலவர். தி. நா. அறிவு ஒளி.

3. ஆங்கிலங் கற்ற தமிழறிஞர் கடன்

1. தமிழ்க்கலை வளர்ச்சிக்கேற்ற ஆங்கில நூல்களைத் தமிழில் பெயர்த்தெழுதுதல்.

நம் தாய்மொழி வளர்ச்சிக்கேற்ற எல்லாத் தொண்டுகளையும் அரசியலாரே செய்து முடிக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருத்தல் கூடாது. தமிழிலும், ஆங்கிலத்திலும் வல்ல அறிஞர்கள், மேல்நாட்டாரால் எழுதப்பட்டுள்ள அரிய பெரிய கருத்துகள் அடங்கிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தெழுதி, அவற்றைத் தமிழ் மக்கள் யாவரும் படித்தறிய உதவவேண்டும். ஆங்கில நூல் வளர்ச்சிக்கு எத்தனைப் பதிப்பகங்கள் அறிஞர்களைக் கொண்டு நூல்கள் வெளியிடுகின்றன பாருங்கள்! அதுபோல நாமும் பெருவாரியான தமிழ் நூல்களை அழகிய முறையில் வெளியிடவேண்டும்.

2. சிறந்த தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்.

நம் தமிழின் மேன்மையைத் தமிழர் ஒருகால் மறந்தாலும், சிலர் அழிக்க முயன்றாலும், ஆங்கிலேயர் நடுநின்று உண்மையுரைப்பார்களாகையால், அவர்கள் அறியும் பொருட்டாவது சிறந்த தமிழ் நூல்களையெல்லாம் ஆங்கிலத்தில் பெயர்த்தெழுத வேண்டும். இத்தொண்டினைத் தமிழர் பொருட்டு, 'போப்' என்னும் பெரியார், திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் பெயர்த்தெழுதி வழிகாட்டியுள்ளார். அவர் செய்த தொண்டினால், நம் தெய்வத் திருக்குறள் முதலான தமிழ் நூல்களின் பெருமை உலகமெங்கும் பரவுவதாயிற்று மற்றுஞ் சில மேலைநாட்டினர் இத்தகைய தமிழ்த் தொண்டியற்றி யுள்ளனர். தமிழரிலும் சிலர் செய்துள்ளனர். தமிழ்க் கொலைபுரியுஞ் சிலர் திருக்குறள், ஓர் ஆரிய நூலின் மொழிபெயர்ப்பென வாய் கூசாது பொய்யுரை கூறி ஒழிந்தாரெனில், நம்நாட்டில் அடுத்து வாழ்வோர் தமிழை வளர்ப்பதெப்படி? ஆதலின், ஆங்கிலங் கற்ற தமிழறிஞர்களே! நீங்கள் இம் மொழிபெயர்ப்புத் தொண்டினைச் செம்மையுறச் செய்து, மேலை நாட்டவர் நம் தமிழன்னையைப் போற்றும்படி செய்தல் தமிழ் வளர்ச்சிக்குப் பெருந் தொண்டு புரிதலாகும்.

3. தமிழ், தமிழர்கள் வரலாறுபற்றி ஒருதலைச் சார்பாக ஆங்கிலத்திலும், தமிழிலும், பிழைபட எழுதியுள்ள கருத்துகளை மறுத்துச் செம்மையான வரலாறுகள் எழுதி வெளியிடுதல்.

தமிழ்மொழி பற்றியும். தமிழர்களைப் பற்றியும் ஆங்கிலத்தில் எழுதப்பெறும் நூல்களைக் கொண்டே மேலை நாட்டில் வாழும் ஆங்கிலேயர்களும், இந்நாட்டில் வாழும் ஆங்கிலப் புலவர்களும் தமிழ்மொழி, தமிழர்களைப் பற்றிய வரலாறுகளை அறிந்து, ஆராய்ச்சி செய்ய முற்படுகின்றனர். ஆதலால், தமிழில் சிறந்த ஆராய்ச்சியில்லாதார், ஆங்கிலத்தில் பிழைபட எழுதி வெளியிட்டிருந்தால் அதனையே உண்மையென ஆங்கிலேயர் நம்பி, ஆராய்ச்சி செய்யத் தொடங்கி விடுவர். இதனால் உண்மை வரலாறு மாறுபடவுங்கூடும். "தமிழர் நாகரிகம் மிகவும் முற்பட்டது; ஆனாலும், தமிழர் ஆரியர் நாகரிகத்தைப் பின்பற்றினார்கள்" எனப் பிழைபட வரலாறு எழுதிய வடநாட்டவரும் உளர். ஆகையால், அருந்தமிழ், ஆங்கிலம் முதலியவற்றில் வல்ல பேரறிஞர்கள், பலர் எழுதியவற்றையும் பார்வையிட்டுத் தாம் கண்ட உண்மைகளை ஆங்கிலத்தில் எழுதி உலகமறியப் பரப்பவேண்டும். இதுவும் தமிழாக்கத்திற்குச் சிறந்த தொண்டாகும்.

4. தமிழ்க்கலைகளின் சிறப்பினை ஆங்கிலேயர் உணருமாறு ஆங்கிலேயர்களிடையே சொற்பொழிவாற்றியும், ஆங்கிலச் செய்தித்தாள் நடத்தியும் பணிபுரிதல்.

நம்மை நாமே புகழ்ந்து கொள்வதிற் பயனில்லை. "திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்" என்ற பாரதியார் மொழிப்படி, தம் தமிழின் பெருமையைப் பிறர் உணருமாறு, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகட்கு ஆங்கிலத்தில் வல்லவர்கள் சென்று தமிழைப்பற்றிச் சொற்பொழிவு செய்து, ஆங்காங்கே தமிழின் பெருமையை நிலைநாட்டவேண்டும். அவர்கட்குத் தமிழைக் கற்பிக்கவும் வேண்டும். இதற்குத் துணையாகத் தமிழைப் பற்றிய செய்திகளை மேலைநாட்டவர் படித்தறிய ஆங்கில வெளியீடு நடத்தவேண்டும். பிற ஆங்கில இதழ்கட்குத் தமிழைப்பற்றிய கட்டுரைகள் எழுத வேண்டும். ஆங்கில வெளியீடு நடத்தும் தொண்டினைத் தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளார் செய்து வருவது தமிழுலகம் போற்றுதற் குரித்தாகும்.

4. பொது மக்கள் செய்யவேண்டுவன.

1. தமிழ் தெரியாதவரிடத்தன்றி, மற்றெல்லாரிடத்திலும் தமிழிலேயே பேசுதல், எழுதுதல் செய்தல்.

புலவர்கள், அரசினர், தாய்மொழி வளர்ச்சிக்கு வேண்டுவன செய்ய முன்வந்தாலும், பொது மக்களின் உதவியின்றி ஒன்றும் நடவாது. ஆகலின், பொதுமக்கள் தமிழ் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டுவன பற்றிச் சிறிது கூறுவோம். ஆங்கிலங் கற்ற தமிழர்கள் தம் மனைவி மக்கள் பிள்ளைகளோடும், நண்பர்களோடும், பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே பேசுவதையும் கடிதங்கள் எழுதுவதையும் காண்கிறோம். இவர்கள் வீட்டுப் பழக்கவழக்கங்களிற் கூட தமிழை மறந்து, ஆங்கிலத்தைக் கையாளுவார்களானால், இவர்கள் தமிழ் பேசுவதெங்கே ? விண்ணுலகத்திலோ ? அல்லது பொன்னுலகத்திலோ ? அறியோம். அரைகுறையாக ஆங்கிலங் கற்ற தமிழர்களோ முக்காற் பங்கு ஆங்கிலத்தையே கலந்து பேசுவர். அவர்கள் பேசுவதில், சில இங்கே கூறுவோம். ஒரு நண்பரைக் கண்டு பேசும் வகை : "வாட் மிசுட்டர் கமாண், நேட்டிவ் பிளேசை விட்டு எப்போ இசுட்டார்ட் பண்ணினே ? மார்னிங் டிபன் ஆச்சா ? 'அவ்வார் யூ' அவ் வீசுவர் சைல்டு" என்பர். இதற்கு மேலுங்கலந்து பேசுவர் ; அதை எழுதவும் என் உள்ளம் நடுங்குகின்றது. தமிழ் மக்கள் கருத்தின்றி இப்படி இருந்தால், தமிழ் மொழி உயிர் வாழ்வதெங்கே ? கல்லாத பாமர மக்களாவது நம் தாய்மொழியைப் பேச்சு வழக்கில் தூய்மையாகப் பேசி வருகிறார்கள். அதுதானும் படித்தவரிடைக் காணோமே ? தமிழ்க்குடிப் பெருமக்களே ! இனிமேலாவது ஒவ்வொருவரும், தம்முடைய மனைவி, மக்கள், உற்றார் உறவினர்களிடத்தும், கடைத்தெரு, தொழில் நிலையம், மற்றப்பொது விடங்களிலும், கலப்பற்ற தூய தனித்தமிழிலேயே எழுதவும் முற்படுங்கள். தமிழே சிறிதும் தெரியாத ஆங்கிலேயரிடத்தில் வேண்டுமானால் ஆங்கிலத்தில் பேசுங்கள் ; வேண்டாவிடத்து அதைப் பேசித் தமிழைக் கெடுக்கவேண்டாம். வங்காளி, குசராத்தி முதலிய மொழி பேசும் வடநாட்டினரை நோக்குங்கள் : அவர்கள் ஒருவரை ஒருவர் காணும்போது, அவர்கள் தம் தாய் மொழியிலேயே பேசுவார்களேயன்றிப் பிறமொழிகளில் பேசார். நம் தென்னாட்டிலும் தெலுங்கர்களும், மலையாளிகளும் அங்ஙனமே செய்வார். அவர்களைப் பார்த்தாவது தமிழன் தாய்மொழியினிடத்துப் பற்றுக்கொள்ள வேண்டாமா ?

௨. தமிழ் நூல்களை ஆர்வத்துடன் வாங்கிக் கற்றல்.

ஒரு மொழியானது நாட்டிற் பரவி வளரவேண்டுமாயின், அம் மொழியிலியற்றப்பட்ட நூல்கள் ஏராளமாக விலையாகவேண்டும். அதுதான் நம் தமிழ் நாட்டில் இல்லை. பெரும் புலவர்களால் எழு தப்பட்ட அரிய பெரிய நூல்கள் வாங்குவாரின்றி மங்கி மடிகின்றன. தமிழ் நாட்டிலுள்ள பலதிறப்பட்ட பள்ளிகளிலும், போதுமான தமிழ் நூல்களனைத்தும் வாங்கி வைக்கப்பெறுவதில்லை. தமிழ்ப் பொது நூல் நிலையங்களிலும் வைக்கப்பெறவில்லை. தமிழ் நூல்களை எழுதி வெளியிடுவோர் வறுமையுற்று வாடுகின்றனர். அவர்கள் நிலை இதுவானால், அவர்கள் நூல்களை ஆராய்ச்சி செய்து வெளியிடுவது எங்ஙனம்? தமிழர் ஆங்கில நூல்களை வாங்குவதில் பத்தில் ஒரு பங்குகூடத் தமிழ் நூல்களை வாங்குவதில்லை. இத்துணைக்கும் கரணியம் தமிழர்களுக்குத் தமிழினிடத்து உண்மையான பற்றின்மையே யாகும். இனிமேலாவது, தமிழறிஞர்கள் எழுதிய தமிழ் நூல்களை வாங்கி ஒவ்வொருவரும் தத்தம் வீட்டில் தொகுத்து ஒரு நூல் நிலையம் அமைத்துக் கற்றுவர வேண்டும். ஒவ்வொரு சிற்றூரிலும் தமிழ் நூல்களைக் கொண்ட நூல் நிலையத்தை ஏற்படுத்தவேண்டும். ஏழைகள் அறிவுபெறுதற் பொருட்டு, அரசினர் உதவி கொண்டு தமிழ் நூல்கள் அடங்கிய சுற்று நூல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். சிறந்த தமிழ் நூல்கள் இலக்கக் கணக்கில் அச்சிடப் பட்டுத் தமிழ் மக்கள் கைக்கு வந்தால்தான் தமிழ்த்தாய் யாண்டும் ஒளி பெற்றுத் திகழ்வாள்.

௩. தமிழ்ப் புலவர்கள் ஏற்படுத்தும் கழகங்களில் சேர்ந்து எல்லாவகையாலும் உதவி புரிதல்.

தமிழ்ப் புலவர்கள், தமிழ் வளர்ச்சி கருதியும், மக்கள் அறிவு வளர்ச்சி கருதியும், துவங்கும் தமிழ்க் கழகங்களில் ஆங்காங்குள்ள தமிழர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தும், அறிஞர்கள் நிகழ்த்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும், அவர்களிடம் தமிழ் நூல்களைப் பயின்றும், தமிழறிவை வளர்க்கவேண்டும். இக்காலையில் தமிழ்ப் புலவர்கள் பல கழகங்கள் தொடங்கி ஆங்காங்குச் சொற்பொழிவுகள் செய்தும், தமிழ் நூல் கற்பித்தும் வருகிறார்கள். ஆனால் அவற்றில் வந்து கலந்து பயன்பெறும் தமிழர்கள் தொகை குறைந்துகொண்டே வருகிறது. அதற்குக் காரணம், தமிழர் வீணான ஆரவார வாழ்க்கையில் ஈடுபட்டுத் தம் மொழியையும், தங்கள் மெய்யறிவையும் இழந்திருப்பதேயாகும். செந்தமிழ் நாட்டு மக்களே! இன்னமும் உறக்கத்தில் ஆழ்ந்திருத்தல் தகுமோ? உலகம் போற்றும்படியான தமிழ்ப் புலவர்கள் எழுதி நமக்களித்த நூல்களைக் கற்றும், கேட்டும் நன்னெறியடைந்து இன்புற்று வாழ முயலுங்கள். தமிழ் வளர்ச்சி,

தமிழர் வளர்ச்சியெனக் கருத்தில் இருத்துங்கள். தமிழ் நூல்களைத் தள்ளாது படியுங்கள். அப்போதுதான் தமிழ் வளரும்.

4. அரசினர் தமிழ்மொழி வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாவிடத்தும், தீங்கு செய்யுமிடத்தும் தகுந்த முறையில் அக்குறைகளை நீக்க முற்பட்டு முடிவு பெறச்செய்தல்

முன்னர் இரண்டாம் பகுதியில் அரசினர் தமிழ் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டுமெனக் குறித்தவற்றையும், இன்னும் அவ்வப்போது செய்யவேண்டியவற்றையும் தமிழர் ஒன்றுகூடி, அரசியற்றலைவர்களிடம் நேரேயும், தங்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றுச் சட்டமன்றுக்குச் சென்றிருக்கும் உறுப்பினர் வழியாகவும், எடுத்துரைத்து ஆவன செய்யத் தூண்டவேண்டும். அங்ஙனஞ் செய்யாமல் தமிழுக்கு இடையூறு செய்ய முற்பட்டால், அவர்கள் தவறுகளை உலகமறிய நேரிய முறையில் எடுத்து விளக்கி வழக்காடி வேண்டியன செய்யும்படி கேட்கவேண்டும். அதற்கும் இணங்காவிட்டால் தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழர் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் உண்மைத் தொண்டர்களைத் தேர்ந்தெடுத்து அரசியலில் அமைத்து வேண்டுவன செய்து தமிழ்மொழியைப் பாதுகாத்து வளர்க்கவேண்டும். இது தமிழர் செய்யவேண்டிய தலையாய கடனாகும்.

5. தமிழ் வளர்ச்சியே தமிழர் வளர்ச்சியும், தமிழ்நாட்டு வளர்ச்சியுமாகுமென்பதைக் கருத்திற் பதித்து எங்குந் தமிழ் முழக்கஞ்செய்தல்.

தமிழ் வளரவேண்டுமானால், தமிழில் பல கலைகளும் வளர வேண்டும். கலைகள் வளர வேண்டுமானால், அவற்றை மக்கள் கற்க வேண்டும். கற்பதனால் எல்லா மக்களும் அறிவு நிரம்புவர். அறிவு நிரம்பினால் மக்கள் ஆண்மையும், வீரமும், உணர்ச்சியும், முயற்சியும், உரிமையும் எய்தி எல்லாவற்றிலும் முன்னேற்றமடைவர். அவர்கள் முன்னேறினால் தமிழ்நாடு முன்னேறுமென்பதில் ஐயமும் உண்டோ? நம் பண்டைத் தமிழரின் சிறப்பைச் சிறிது எண்ணுங்கள். அந்நிலையை அடைய முயலுங்கள். தமிழர்கள் தனியாட்சி செலுத்திப் பல கலைகளிலும், பல தொழில்களிலும், மேம்பாடுற்றுக் கிரேக்கருடனும், உரோமருடனும் வாணிகம் புரிந்தனரன்றோ? அத்தகைய தமிழ்ப் பெருங்குடி மக்களா இன்னும் மடிந்திருப்பது? "எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியர் திண்

ணியராகப் பெறின்" என்ற பொய்யில் புலவன் பொன்மொழிக் கிலக்கியமாக நீங்கள் முன்வந்து எண்ணியபடி இடைவிடாத் தொண்டு செய்து, உயர்நிலை யடையுங்கள்!

5. தாய்மார் கடமை.

தண்டமிழ்த் தாய்மார்களே! தாங்கள் மகவையீன்று, அதற்குப் பாலூட்டும் போதும், தாலாட்டும் போதும், கொஞ்சி முத்தமிடும்போதும், நம் தேனினும் இனிய தெய்வத் தமிழ்மொழியிலன்றோ பேசினீர்கள்? தாய்மார்களாகிய தங்களால், கருக்கொண்டதிலிருந்து ஊனிலும், உயிரிலுங் கலந்தூட்டிய மொழியையன்றோ தாய்மொழியென்று கூறுகின்றோம்! ஆதலால் தாய்மொழித் தொண்டில் தலைசிறந்தவர்கள் தாய்மார்களே என்பதைக் கூறவும்வேண்டுமோ? செந்தமிழ்ப் பெருமாட்டிகளே! தமிழ்ப் பால் குடித்த சில மக்கள் தமிழன்னையை மறந்து அவளை வெயிலுறத் தள்ளி, அயல் மொழிகட்கு அடிமையாயினர். அவர்கட்கு நல்லறிவு புகட்டுதல் தங்கள் தலையாய கடமையன்றோ? தமிழ் வளர்ச்சி கருதி இந்நூலில் பலபடப் பகர்ந்த தொண்டுகளிலெல்லாம் தங்கட்கே முதலிடம் உண்டென்பதை ஈண்டு வற்புறுத்துகின்றோம். தாய்மார்களே! தங்கள் குழந்தைகளை. உண்ணும்போதும், உறங்கும்போதும், ஆடும் போதும், பாடும்போதும், பேசும்போதும், தமிழையே கருத்திற் கொள்ளச் செய்யுங்கள். தங்கள் குழவிகளை, கற்பும், புலமையும், வீரமும் வாய்ந்த பண்டைக் கண்ணகி, காரைக்காலம்மையார், வெள்ளிவீதியார், நச்செள்ளையார், ஆதிமந்தியார்களைப் போலவும், பாண்டியன் அறிவுடைநம்பி, குலோத்துங்கன், திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், புகழேந்திகளைப் போலவும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கச் செய்யுங்கள். தாய்மார்கள் தமிழ்த் தொண்டில் தலைசிறந்தவர்களென்பதை இப்போதும் கண்கூடாகக் காட்டி வருகிறீர்கள். இனிமேலும், குறைவிலாத் தொண்டாற்றித் தாய்மொழியைப் பாதுகாப்பது தாய்மார்கள் கடமையாகும்.

6. இளைஞர் கடமை.

அருந்தவம் புரிந்து தமிழ்நாட்டுத் தமிழர் குடியிற் பிறக்கும் பேறுபெற்ற இளைஞர்களே! நீங்கள் உலகில் தோன்றும் வீணுன புரட்சிகளில் தலையிடாதீர்கள். நீங்கள் உங்கள் பண்டைத் தமிழரின் மேல்நிலையை ஆராய்ந்து பாருங்கள். அந்த நிலையை அடைய முற்படுங்கள். நீங்கள் தமிழை வளர்த்தால்தான் மேல்நிலையடைய முடியும். 'தமிழ் நாடு' என்ற பெயர் தமிழ் என்ற மொழியின் அடியாகப் பிறந்ததென்பதை உன்னுங்கள். நம் தாய்மொழிதான் நமக்கு அறிவையும், நாகரிகத்தையும், நாட்டையும் நல்கிற்று. நடுவு நிலைமையுடையவர், தமிழர் நாகரிகமே உலகில் ஒப்புயர்வற்றது என, அறுதி

யிட்டுக் கூறுகின்றனர். அத்தகைய பெருமை வாய்ந்த தமிழர் தம் மொழியையும் பறிகொடுத்து வாழமுடியுமோ?

நீங்கள் பள்ளிக்கூடத்தில் தமிழைநன்கு படியுங்கள், எவ்விடத்தும், எல்லாரிடமும் தனித்தமிழிலேயே பேசுங்கள்; எழுதுங்கள். டாக்டர் போப் என்னும் ஆங்கிலேயர் தமிழ் கற்று, அதன் பெருமையை உணர்ந்து, தம்மைத் தமிழ் மாணவன் என்று கூறிக்கொண்டாரே! தமிழ் இளைஞர்களாகிய நீங்கள் "யாங்கள் தமிழர்" என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டு தமிழைப் பலவழிகளிலும் வளர்க்கவேண்டாமா? இன்றைய இளைஞர்களாய நீங்களே நாளை நம் நாட்டின் தலைவர்களாக வரப்போகிறீர்கள். உங்கள் அரிய முயற்சியினுல்தான் தமிழ்த்தாய் அரியணை ஏறவேண்டும். அதற்கு நீங்கள் என்ன செய்யவேண்டும்? தமிழினிடம் தணியா வேட்கை கொண்டு, கற்று அதன் சுவையினை யறியவேண்டும்! அதை எங்கும் பரப்பவேண்டும். அவற்றிற்குரிய வழிகளை இத்தகைய நூல்கள் வாயிலாகவும், அறிஞர்கள் வழியாகவும் கேட்டறிந்து ஒல்லும் வகை தொண்டியற்றுங்கள். உங்கள் தொண்டையே தமிழ்த்தாய் விருப்புடன் எதிர்பார்த்து நிற்கின்ருள்.

இதுவரையும் தமிழர், தமிழ் வளர்ச்சிக்குச் செய்பவேண்டுவன பற்றி, புலவர் கடமை, அரசினர் கடமை, ஆங்கிலங் கற்ற தமிழறிஞர் கடன், தமிழ்ப் பொதுமக்கள் கடமை, தாய்மார் கடமை, இளைஞர் கடமை என்னுந் தலைப்புகளின் கீழ்ச் சுருக்கமாகக் கூறியுள்ளோம். சுருக்கங் கருதிக் கூறப்படாதனவுமுள. தொடர்பாகத் தமிழ்த்தொண்டு செய்து வருபவர்களுக்கு இது தொண்டுகளை நினைவூட்டும் ஒரு சிறு சுவடியாகும்; தமிழ்த் தொண்டில் ஆர்வமுடையார்க்கு, அதைச் செய்தற்குரிய வழிகாட்டித் துணைபுரியும் ஒரு சுற்றறிக்கையுமாகும் என்னுந் துணிபுடையோம்."

வாழிய செந்தமிழ்! வாழிய தமிழ்த்திருநாடு! வாழ்க நற்றமிழர்!

(முற்றும்.)

என் கருத்து:

—இம் முடிவோடு நூல் முற்றுப்பெறுகிறது.

எழுச்சியும் ஆர்வமும் ஊட்டும் இந்நூலின் உணர்ச்சி தமிழினத்தில் என்றென்றும் அகலாதிருக்க வேண்டுமெனக் கருதியே மேற்படி பொத்தகக் கருத்தை வெளியிடுகிருேம்.

தமிழில் கலை நூல்கள், அறிவியல் நூல்கள் மிக மிக வர வேண்டும் என எல்லாரும் கூவுகின்றனர். இஃது எவ்வாறு வர முடியும்? கட்டாய முயற்சியாற்றுன் தோன்ற முடியும் என்பது திண்ணம்.

இன்று கல்லூரியிற் பயில்வோர்—மாணுக்கர்—"தாம்" பட்டம் பெறுமுன் கட்டாயமாகத் தாம் பயிலும் 'துறையில்' முந்நூறு பக்க அளவில் ஒரு நூல் மொழிபெயர்த்தளித்தால் தான் 'பட்டம்' வழங்கப்பெறும் எனச் சட்டம் செய்தால், ஓராண்டில் ஆயிரக்கணக்கான அறிவியல்—ஆய்வியல்—பல்கலைத் துறை—நூல்கள் தமிழில் குவிந்துவிடாதா? இக்கட்டுரைகளைத் தமிழகத்து, நாள்—கிழமை-திங்கள் இதழ்கள் கட்டாயமாக வெளியிட அரசு கட்டளையிட்டால், நாட்டில் 'அறிவுப் புரட்சி' — 'கலை மலர்ச்சி' தோன்றிவிடாதா? இம் மொழிபெயர்ப்புகளைத் தக்க பேராசிரியர்பால் பதிவுசெய்து 'தக்க மொழிபெயர்ப்பென' அன்னார் உரைத்த பின்னர் வெளியிட ஆவன செய்தல் வேண்டும்.

கற்ற கல்வி, நூலாக எழுத முற்படுங்கால் நனிமிகத் தெளிவாக நெஞ்சிற் பதியும் என்பதை யாரே அறியார்? இப்போது பண்டாரகர், 'இலக்கிய முதல்வர்' முதலிய பட்டங்கள் 'ஆய்வுக் கட்டுரை' அளித்தால் வழங்கப்படுவதைப்போல் 'ஒரு துறையில் மொழிபெயர்ப்புக் கட்டுரை' எழுதியளித்தால் அளிக்கப்படும் என வரையறை வைப்பது மிகவும் சீரிய செயலாகும். சட்டம், பொறியியல், தொழிலியல் வணிகவியல், மருத்துவ இயல் துறை மாணுக்கருக்கும் இம் முறையைச் செயற்படுத்திஞல் பல்வகைத் துறையிலும் ஒரே பொழுதில் தமிழ்ல் நூல்கள் குவிந்துவிடும்! மாணுக்கரே தம் வேண்டுகைக்கு இன்றியமையாத நூல்களை இயற்றுவதால் 'தன்னிறைவு' மறுமலர்ச்சியும் மலரும்!

எல்லாப் பதிப்பகங்களும் ஒரு கதை நூலுக்கு ஓர் அறிவியல் நூலை வெளியிட்டால்தான் அவை இயங்க 'அரசுரிமை' அளிக்கவேண்டும். இச்சட்டத்தால் உடனடியாக அனைத்துப் பதிப்பகங்களும் பலவகை, பல் துறை நூல்களை வெளியிடும்.

எழுத்தாளர் கழகம், தமிழாசிரியர் கழகம், தொழில் நுட்பத் துறைக் கழகத்தினர் ஆண்டொன்றுக்குக் குறிப்பிட்ட அளவு பல்கலைத் துறை—அறிவியல் துறை நூல்களை மொழிபெயர்த்தளிக்க வேண்டும் எனக் கட்டளையிட்டு அவ்வாறு நூல் எழுதியளிப்போருக்கு வளமான அன்பளிப்பும் நல்கவேண்டும்.

இந்தக் கருத்து இஞ்ஞான்று இவ்வளவு இன்றியமையாதது என்பதைத் தனித் தமிழன்பா நன்குணரக்கூடும்! தமிழின் மலர்ச்சி முனைப்போடு விளைய நம்மால் இயன்றதைச் செய்வோம். O

மக்களவை

ம : 212 : தமிழ் வளர்க்கும் இதழ்களை நூலகங்களில் இடம் பெறச் செய்க !

நல்லுரை யாசானே ! இனிய தமிழ் வணக்கம். அன்று ஒரு பொழுது, தூது செல்லப் பரமனையும் பணிகொண்ட பைந்தமிழ் வழங்கி வருமிப் பழந்தமிழ் நாட்டு நூலகங்களில், 'தென்மொழி', 'செந்தமிழ்ச் செல்வி' போன்ற தனிச் செந்தமிழ் இதழ்கட்கு இடமில்லாமற் போனதை யறியுங்கால் நந்தமிழர், நிலாமண்டிலச் செலவு நிகழும் இவ்வறிவியற் காலத்திலும், அறியாமை புதைசேற்றி லேயே ஆழப் புதைந்துள்ளமை புலனாகின்றது. தமிழ் அறிஞர் (!) எனச் சொல்லிக்கொள்ளுஞ் சிலரோ, ஆரிய அடிமை மடித்துயிலில், ஆழ்ந்து கிடக்கின்றனர். இவர்கட்கு என்றுதான் விடியுமோ ? தமிழொளி படியுமோ ?

தமிழ் நிலம் காப்பதாகச் சொல்லிக் கொள்ளும், 'கலைமகள்' 'தீபம்' போன்ற இதழ்கள் எல்லா நூலகங்களிலும், தமிழ்த் திருப் பணியாற்றுகின்றன. கற்க வருவோரும் அத்தகைய இதழ்களையே ஆர்வம் மீதூரக் கற்கின்றனர். இவர்களெல்லாம் பட்டந்தாங்கி யோரே ; 'கற்றவர்' அல்லர். ஒண்டவந்த மொழிக்கு உயர்வளித்து, உலவாச் செந்தமிழ் மொழியை — இதழ்களை, ஒளி மங்கச்செய்து, நூலகங்களில் மட்டுமன்றி, அடுப்பங் கரையிலும் ஆட்சிபுரிந்து வரும், மொழி நலங்கெடுக்கும் இதழ்களைத் தமிழறிஞர் என்போர் இனங் கண்டிலரா ? அன்றிக் கண்டும், வாளா விருக்கின்றனரா ? இம்மட்டோ ! தமிழ் கற்றுத் தமிழாசிரியர்களாய்த் தமிழ்த் தொண்டாற்றுந் தமிழருட் பலர் 'தென்மொழி' போன்ற செந்தமிழ் இதழ்களைக் கண்டாலும் முகஞ் சுழிக்கின்றனர். புறம் பழிக்கின்றனர். தமிழ் மொழியில் உரையாடுவதும், தம் மேன்மைக்கு ஊறு விளைவிக்குமெனக் கருதி, ஆங்கில மொழிக்கு ஆக்கமளிக்கின்றனர். தமிழில் உரையாடவே நாணுறும் இவர்கள், தமிழராகப் பிறந்தமைக்கே நாணவேண்டும் அல்லவோ? இத்தகையோர் தமிழாசிரியர் களாயினும், பட்டந் தாங்கியோராயினும் வயிற்றுப் பெருமான் பொருட்டு, வறட்டுப் பாடமோதி, வாய் வந்தன பேசித்திரியும் பேதையரே யாவர்.

கற்றவர் தம் நற்றுணை 'தென்மொழி'க்கு என்றுமுண்டு. அதன் பயனாய், சிற்சில விடங்களில் தூய தமிழ் முழக்கங் கேட்கின்றது. இது தனிச் செந்தமிழுக்கு மீண்டும் நற்காலம் பிறக்கிறது என்ப தற்கு நல்லறிகுறியே ; என்றாலும், போற்றுவாரின்றிப் – புனைவா

ரின்றித் தனிச் செந்தமிழ் எங்ஙனந் தழைத்தோங்கும்? ஒலியள வாய் உருக்கொண்ட, ஒரு சில தமிழர் நல்லெண்ணம், செயலளவில் உருக்கொள்ளல்வேண்டும். 'தென்மொழி' 'செந்தமிழ்ச்செல்வி'. 'தமிழம்' போன்ற தனிச் செந்தமிழ் இதழ்களை நூலகங்களில் இடம் பெறச் செய்தல்வேண்டும். உரிய அதிகாரிகளை யணுகி, உண்மைத் தமிழன்பர் முறையீடு செய்தல்வேண்டும். இச்செயல் என்று நிறை வுறுமோ, அன்றே தமிழணங்கின் மனம் மகிழும்; தனிச் செந்தமிழ். நலம் பெற்று வளரும்; தென்மொழி அன்பர் அகமும் முகமும் மலரும். அந்நாள் விரைந்துவர, இறையருள்க. அன்பிலே, தென் மொழித் தம்பி, —பெரு. தமிழ்வேந்தன், உத்தண்டியூர்.

ம : 213 : இயக்கப் பூசல்கள் இயல்பே!

ஐயா அவர்கட்கு வணக்கம். புதிய "தமிழ்ச்சிட்டு" முழு வதையும் படித்துப் பார்த்தேன். அந்த மடல்களைப் பற்றிச் சொல்வ தற்கு என்ன இருக்கிறது என்றுதான் புரியவில்லை. "ஏழு கோடித் தமிழர்கள் இருந்தால் ஏழு கோடி நினைவுகள் இருக்கும். ஏழுகோடி நினைவுகள் எழுந்தால் எண்பது கோடிப் போக்குகள் தோன்றும்" என்று நினைத்து மேலே சென்று கொண்டிருக்க வேண்டியதுதான்.

"உங்களைச் சிலர் மிகுதியாகப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் மிகுதியாகத் திட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல் லாம் காதில் வாங்கிக் கொள்வதற்கே எப்படியோ இருக்கிறது. இவ் விருவகைப் பண்பியல்புகளுமே உணர்ச்சி வழியின்பாற் பட் டவையே யல்லாமல், அறிவு வழியின் பாற் பட்டவையாகத் தோன்றவில்லை.

"சரிக்கட்டிப் போவது" என்ற பண்பு தங்களிடம் இல்லை என்று பலர் கூறக் கேட்டிருக்கிறேன். அதுமட்டு மிருந்திருப்பின் உங்களின் எழுத்துகள் என்றோ வீழ்ச்சி யைத் தேடிப் போயிருக்கும். "பெருஞ்சித்திரனாரிடமுள்ள இழிந்த இயல்புகள்" என்று பலர் கூறுவதும் என்னவாயிருக்கும் என்று என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

ஒரு நாட்டு ....க்கென்று ஓரியக்கத்தைக் கூட்டும் பொழுது, செயற்பாட்டுப் பூசல்களால் பிளவுகள் நேருவதும், முன் வைக்கும் கொள்கைகளால் பிளவுகள் நேருவதும், புகழ்த் தருவிப்பு களால் பிளவுகள் நேருவதும் இயற்கையே. இதையெல்லாம் எண்ணிக் கவன்று கொண்டிருக்க வேண்டியதில்லை. சிலர் வந்து கொண்டிருப்பதும், சிலர் போய்க் கொண்டிருப்பதும்

தவிர்க்கவியலாதவையே! புகழ் மிக்க உருசியப் புரட்சியாளர்களிடையே பிளவு நேர்ந்ததையும், மாமாந்தன் இலெனினின் உண்மைத் தலைமையே வெற்றியை நோக்கி மேலெழுந்ததையும், வெற்றி கண்டதையும் நாம் நினைவு கூரலாம். ஆங்கிலர் முற்றுளுமைக் கெதிராகப் போராடிய இந்தியத் தலைவர்களிடையில் இருந்த பிளவுகள் உலகறிந்தவை. சிலர் இந்து மதத்திற்காக உரிமை வேண்டியதும், சிலர் தன்னுரிமைச் சுரண்டலுக்காக உரிமைவேண்டியதும், சிலர் இனப்பகைக்காக உரிமை வேண்டியதும், சிலர் வெறும் உணர்ச்சி வயத்தால் உரிமை வேண்டியதும், சிலரே பொதுவுடைமை நோக்கில் உரிமைக்குப் போரிட்டு மாண்டதும் நம்மால் நன்கறியப் பட்ட வரலாற்றுச் செய்திகள். எனவே, இவ்வகைப் பிளவு நிலைகள் எதிர்பார்க்கப்பட்டவை தாமேயன்றிப் புதியனவல்ல.

ஓரியக்கத்திற்கு இன்றியமையா மூவகைப் பண்புகள் வேண்டும் என்று பாவலன், 'துங்' வற்புறுத்துகிறான். அவை: 1. தன் திறனுய்வு, 2. தவருன கருத்துகளை மாற்றிக் கொள்ளத் தயங்காமை, 3. உண்மை எங்கிருந்து வரினும் ஏற்றுக்கொள்ளும் துணிபு. இம் மூன்றையும் இறுக்கமாய்க் கைக்கொள்வோமாயின், நம் மூவாயிர மாண்டுக்கால அடிமை வரலாறு முற்றுப்பெறும். "நெடுமை நெடுங் காலமெலாம் ஆரியத்தின் கையால் நாம் நெஞ்சொடிக்கப்பட்ட கதை மாறி நடந்தேறும், புலங்குவிந்த சாதி மதம் பொடிந்து புகையாகும்! பூண் தெறித்து வானிடையில் மின்னலிடி தோன்றும்! புறத்தெழுந்த புதுப் பாட்டாய்ப் பொய்யழிந்த செய்தி புதுப் பண்ணின் இசையோடு யாழ் நரம்பில் ஓடும்!"

— இரணியன், சென்னை – 56.

பூங்குன்றன் வாழ்க!

தென்மொழியன்பர், புதுகை சுந்தம்பட்டி ஆசிரியர், திரு. முருகு. இறைமறவன் அவர்கள் துணைவியார் திருவாட்டி, நீலா அவர்கள், கடந்த சூன் திங்கள், 20-ஆம் நாள் ஓர் ஆண் மகவினை ஈன்றெடுத்தார்கள். அக்குழவிக்குப் பெயரிட வேண்டித் தென்மொழிக்கு உருபா. இரண்டு அன்பளிப்பாக விடுத்துள்ளார்கள். அக்குழவிக்குப் பூங்குன்றன் என்று பெயரிட்டுப் பல்லாண்டு வாழ்ந்து, தமிழ்க்கும், நாட்டுக்கும், இனத்துக்கும் பயன் தருமாறு வாழ்த்துகின்றோம்.

பெயர்ப் பலகைகள் தமிழ்ப்படுத்தும் முயற்சியில் முதலிடம் பெறுகிறது கோவை!

(இறுதியாக அங்கு வெளியிடப்பெற்ற அறிக்கையைக் கீழே கொடுத்துள்ளோம். ஆங்காங்குள்ள அன்பர்கள் இம்முறையை எல்லா ஊர்களிலும் பின்பற்றக் கேட்டுக் கொள்கின்றோம்.)

பெயர்ப் பலகைத் தமிழ்ப்படுத்தம்.

வணிக நிலையங்கள், பிற நிறுவனங்கள் முதலியவற்றிற்கு

இறுதி அறிவிப்பு.

ஐயன்மீர் !

உங்கள் பெயர்ப் பலகைகளைத் தமிழில் மொழிபெயர்த்து மாற்றி எழுதிவிட்டீர்களா ? இல்லையென்றால், உடனடியாக அங்ஙனம் எழுதுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இம் மாற்றத்திற்குரிய இறுதி நாள் : 1975 திசம்பர், 15. அதற்குள் இம் மாற்றத்தைச் செய்துவிடல் வேண்டும்.

(பார்க்க : தமிழக அரசு உத்தரவு—16-9-75 : மாற்றஞ் செய்யாதவர்களுக்கு உரிமம் நீக்கப்படும் : கோவை நகராட்சி அறிவிப்பு—27-9-75.)

பெயர்ப் பலகைகளைத் தமிழில் மாற்றுவதற்கான நெறி முறைகள் பின்வருமாறு :

1. பெயர்ப் பலகைகளில், மேலே முதல் நிலையில் (தலைப்பில்), தமிழில் மொழிபெயர்த்த பெயரும், அதை ஒட்டி வரும் வேறு பிற சொற்றொடர்களும் தமிழில், பெரிய, தடித்த எழுத்துகளில் எழுதப்படல் வேண்டும்.
2. அடுத்த நிலையில், கீழே தான் (வேண்டுமென்றால்), ஆங்கிலத்தில் சிறிய, சன்ன எழுத்துகளில் பெயரும், சொற்றொடர்களும் எழுதிக் கொள்ளுதல் வேண்டும்

எழுத்து அளவு :

தமிழ் (5 பங்கு - தடிப்பு)

English (3 பங்கு - சன்னம்)

[தமிழ் எழுத்து 5 பங்கு அளவு என்றால், ஆங்கில எழுத்து 3 பங்கு அளவே இருத்தல் வேண்டும்.]

3. கீழே உள்ள ஆங்கில எழுத்துகள், வெறும் வண்ண எழுத்துகளாய் இல்லாமல், மர, இரும்பு, அளமிய (அலுமினிய) அல்லது ஞெகிழி ஒளி எழுத்துகள் (Iluminated

Plastic or neon letterings) ஆக இருந்தால், மேலே தமிழிலும் அதேபோல் – ஆனால் பெரிய அளவில் – மர, இரும்பு, அளமிய அல்லது நெகிழி ஒளி எழுத்துகளிலேயே ஒத்த முகாமை பெற்று, அறிவிப்புகள் அமைந்திருத்தல் வேண்டும். இது கட்டாயம்.

4. கீழே ஆங்கிலத்தில் காணப்படும் எல்லாச் சொற்கள், சொற்றொடர்களுக்கும், மேலே தமிழில் – பெரிய அளவில்– அவற்றிற்குரிய மொழிபெயர்ப்புகள் இருத்தல்வேண்டும். அதாவது, மேலே தமிழில் காணப்படாத எந்த ஒரு சொல்லோ, தொடரோ கீழே ஆங்கிலத்தில் இருத்தல் கூடாது. முகவரி, தொலைபேசி போன்ற விளத்தங்களுக்கும் இது பொருந்தும்.

5. தமிழில் எழுதுவது என்றால் என்ன ?—'ஸ்டோர்', 'கம்பெனி', 'எலக்ட்ரிக்கல்ஸ்', 'டெக்ஸ்டைல்ஸ்', 'மார்ட்', 'கிளப்', 'சலூன்', 'டெய்லர்ஸ்', 'பவன்' என்று எழுதி விடுவது தமிழில் எழுதினதாகாது. மற்று, அவற்றை முறையே, 'பண்டகம்', 'குழுமம்', 'மின் திறலார்', 'நூற்பகத்தார்', 'அங்காடி', 'விடுதி', 'முடி திருத்தகம்', 'தையலகம்', 'நிலையம்' என்று உண்மையாகவே, தூய தமிழ் மொழியில் அமையுமாறு மொழிபெயர்த்து எழுதுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டு: 1. P. S. R. Beauty Palace - பீ. சு. இரா. அழகு மாளிகை, 2. Shoba Cloth Centre-சோபா துணி நடுவம், 3. Parani Stores, General Merchants-பரணி மளிகை, பொது வாணிகர்கள், 4. Sri Krishna & Co, A Textile Show Room – திரு. கிருட்டிணா, குழுமம் ; ஒரு நூற்பகக் காட்சி அறை, 5. Mahalakshmi Steel House, Dealers Eversilver utensils, Raja Brand Press Buttons Etc., – மகாலக்குமி வெள்ளிரும்பு மாளிகை; பகுவிற்பனையர்: நிலை வெள்ளி ஏனங்கள், இராசா குறி அழுத்துப் பொ(ரு)த்தான்கள் முதலியன, 6. Hotel Davey; Boarding and Lodging - தேவி உணவகம், உண்டுறை விடுதி, 7. Davey & Co., Bakers, Confectioners and Caterers - தேவி குழுமம்; அடுமனையாளர்கள், இனிப்பு வகை செய்வோர், உணவளிப்போர்.

6. தமிழில் எழுதுங்கால், எந்தக் காரணம்பற்றியும், வடமொழி ஒலிக் கிரந்த எழுத்துகளான, 'ஜ', 'ஸ்ரீ', 'ஷ', 'ஸ', 'ஹ', 'க்ஷ' போன்றவை வரக்கூடாது. 'ஸ்ரீ' என்பது 'திரு' என்றே தமிழில் வரும். மற்றவற்றையும் தமிழ் ஒலிப்படுத்தி இலக்கணப்படியே எழுதுதல் வேண்டும்.

அதேபோல், 'ர', 'ட', 'ல' போன்ற மொழி முதல் வாராத எழுத்துகளையும், 'இ', 'உ', 'அ' என்ற முன்னெட்டுகளைச் சேர்த்தும், அன்றிப் பிறவாறு திருத்தியுமே எழுதுதல் வேண்டும். அப்படியே எழுதிவிடுதல் கூடாது.

7. *இவ்வனைத்து நெறிமுறைகளுக்கும் உட்படவே, எந்த வகை நெகிழ்ச்சியும் வழுவுமின்றி, பெயர்ப் பலகைகளைத் தமிழில் மாற்றஞ் செய்யவேண்டும்.

8. *இங்ஙனம் மாற்றம் செய்யும்போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள, தங்கள் பெயர்ப்பலகைகளில் உள்ள ஆங்கிலச் சொற்களை, கீழ்க்காணும் எங்கள் முகவரிகளில் ஒன்றுக்கு - தன் முகவரியிட்ட அஞ்சல் விடை அட்டையுடன் (Self addressed Reply post-card) - எழுதிக் கேட்டு, சரியான மொழிபெயர்ப்பைப்பெற்றே எழுதுமாறு அனைவரையும் வற்புறுத்தி வேண்டுகிறோம்.

9. வரும் திசம்பர்த் திங்களில், கோவைக்கு, தமிழக முதல்வர், பர். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வருகை தரும்போது, கோவை நகரம் முழுமையும் பெயர்ப் பலகைகள் தமிழில் திகழுமாறு செய்துவிடுவது என்று நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். எனவே, 1975, திசம்பர் 15-க்குள் பெயர்ப் பலகைகளை மேற் சுட்டிய நெறிமுறைகளுக்கு உட்படத் தமிழில் மாற்றி எழுதப்படாத நிலைகளை, எங்கள் அமைப்புகள் நேரடிச் செயலில் இறங்கி அகற்ற நேரிடும் என்றும், இதன் வழி அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

10. காவல் துறை போன்ற அரசுப் பொதுத்துறை அறிவிப்புகளுக்கும் இந்தத் தமிழ்ப்படுத்தக் கட்டாயமும், எச்சரிக்கையும் ஏற்கும் என்பதையும் உரியவர்கள் கவனித்து, ஆவன செய்ய வேண்டுகிறோம்.

''கெடல் எங்கே தமிழின் நலம்? அங்கெல்லாம்'' தலையிடுவோம்!
''கிளர்ச்சி'' செய்வோம்! மாற்றி அமைப்போம்!

இன்னணம்,

தமிழ் வளர்ச்சிக் கழகம்,
ஆலாந்துறை

சேரர் கொற்றம்,
கோவை.

பெயர்ப்பலகைத் தமிழ்ப் படுத்தத்திற்கு எழுதிக் கேட்டற்குரிய முகவரிகள் :

புலவர் ந. இரா. தமிழ்வேள்,
இயக்குநர்,
'தமிழ் வளர்ச்சிக் கழகம்',
ஆலாந்துறை, கோவை-641101.

மறை. நித்தலின்பன்.
அமைப்பாளர்,
'சேரர்கொற்றம்',
39, தெரு 11, தாட்டாபாது,
கோவை-641012.

அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

அரசு நடவடிக்கைகளால் இடைநின்ற தென்மொழி பலவகை யான சட்ட முயற்சிகளின் முடிவாக, இப்பொழுது மீண்டும் பீடுநடை போட்டு உலா வருகின்றது.

தொடக்கத்திலிருந்தே தென்மொழிக்குப் பல்வகையான இடை யீடுகள் ; இடர்ப்பாடுகள்; தடைகள்; தாறுமாருன தாக்குதல்கள். பழிப்புச் சகதியினின்றும், இரண்டக முள்காட்டினின்றும் அது தன்னை மீட்டுக்கொண்டு நடைபோட்ட வரலாறுகள் பல. கடந்த பதினுறு ஆண்டுகளாய் அது பட்ட நெஞ்சக் குமுறல்களையும், விட்ட பெருமூச்சு களையும் சொல்லித் தீராது.

அதற்கு அரசின் அரவணைப்பு இருந்ததில்லை ; விளம்பர வரு மானங்கள் அதற்குத் துணை நின்றதில்லை. முழுக்க முழுக்க அன்பர் களின் அருள் நிழலிலேயே அது தன் பீடு குன்ருமல் பெருநடை யிட்டது.

அண்மையில் ஏற்பட்ட நெருக்கடித் தாக்குதலால், அதன் நடை சிறிது தடையுற்றதேனும் அதன் உள்ள உரனில் தளர்வுற்றதில்லை ; தடுமாற்றம் ஏற்பட்டதில்லை. மிகத் துணிவுடனும், துள்ளலுடனும் அது மீண்டும் உங்களின் கைகளில் வந்து மிளிர்கின்றது.

தென்மொழி தடைப்பட்ட பொழுது அதன் நிலை தாளாது கொப் பளித்த நெஞ்சங்கள் பல ; குமுறியெழுந்த நெஞ்சங்கள் பலப்பல. அவையெல்லாம் மகிழுமாறு அதன் பணி மீண்டும் தொடங்குகின்றது.

இடையில் ஏற்பட்ட பொருள் முட்டுப்பாடுகளால் அதன் நிலையில் சிறிது தொய்வு ஏற்பட்டுள்ளது.

எனவே, அன்பர்கள் அதன் நிலைப்பாட்டுக்கு மீண்டும் உதவ வேண்டிய இன்றியமையாக் கடைமைக்கு ஆட்பட்டுள்ளனர்.

அன்பர்கள் அது வலுப்பெற முனைந்து சில வினைப்பாடுகளை மேற் கொள்ள வேண்டிக் கொள்கின்றேன்.

ஏற்கனவே அதன் உறுப்பினர்களாகி, நாடு முழுவதும் விழுதுகளாய் பரந்துள்ள தென்மொழி அன்பர்கள் ஒவ்வொரு வரும் குறைந்தது ஐந்து உறுப்பினர்களையேனும் புதியவர் களாகச்சேர்த்து உதவுக.

செல்வநிலையில் உள்ளவர்கள் தாராள மனத்துடன் தம்மால் இயன்ற நன்கொடைகளை உடனே விடுத்து உதவுக !

ஆங்காங்குள்ள ஆசிரிய அன்பர்களும், பள்ளி, கல்லூரி மாண வர்களும் தனித்தமிழ் அன்பர்களும் இத் தள்ளவொண்ணு முயற்சி யைத் தம் பெருங் கடமையாகக் கொள்க.

தென்மொழியின்றேல் தனித்தமிழ் இல்லை ; இன நலம் இல்லை ; நாட்டு நலம் இல்லை – என்னும் எண்ணத்துடன் கடமையாற்றுக.

கடந்த பத்து ஆண்டுகளில் தென்மொழிக்கு ஏற்பட்ட இழப்பு பதின்மூவாயிரத்து எண்ணூறுரும்! 'தமிழ்ச்சிட்டு' க்கோ இழப்பு ஏறத்தாழ நான்காயிரமாகும். இப்பெரும் இழப்பினைத் தாங்கிக் கொள்ளும் நிலை தென்மொழிக்கில்லை. இப்பொழுதும், தென்மொழிக்கு முகவர்களிடமிருந்து வரவேண்டிய நிலுவை மூவாயிரத்துக்கு மேலிருக்கும்!

எனவே, அன்பர்கள், அருள்நிறைச் செல்வர்கள் அனைவரும் தென்மொழியைக் கண்போல் கட்டிக் காத்துக் கடமையாற்ற வேண்டுகின்றேம்.

முயல்க! உதவுக! தமிழர் தம் சொத்தாகிய இம் முத்திரை இதழ்க்குப் பல்லாற்றானும் முனைந்து, உங்கள் பங்கை உடனே அனுப்பியுதவுக!

அன்பன்,
பெருஞ்சித்திரன்,
ஆசிரியர்.

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	12 உருபா	24 உருபா	24 உருபா.
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ் :	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா. 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

எனக்கென எதுவுமில்லை!

எனக்கென எதுவுமில்லை — இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர! — இவன்
தனக்கொரு நினைவிலனாய் — மிகத்
தாழ்வுற வாழ்வதைத் தவிர்க்கிலனே — எனச்
சினக்கவும் இயல்வதில்லை! — ஒரு
சிரிப்பினில் இகழவும் முடிவதில்லை! — பிற
மனக்குறை எதுவுமில்லை — தமிழ்
மானத்தை மீட்கின்ற நாள்வரையில் — இங்கு
எனக்கென எதுவுமில்லை — இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர!

எண்ணவும் திறனிலனாய் — பிறர்
எடுத்துரைத் திடினுமோர் உணர்விலனாய் — மிகத்
திண்ணமாய் உரைத்திடினும் — ஒரு
செயலுக்கு முன்வரும் துணிவிலனாய் — பல
வண்ணமாய் வாழுகின்றான்! — இவ்
வாட்டமே யன்றிவே றெதுவுமில்லை! — தமிழ்
மண்ணிடைத் தோன்றிவிட்டேன்! — பொது
மனத்துடன் எதனையும் நினைத்துவிட்டேன்! — மற்று
எனக்கென எதுவுமில்லை! — இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர!

உண்மையில் லாதவனாய் — தான்
உண்ணவும் உடுக்கவும் பிறரிடம்போய் — மனத்
திண்மையி ழந்துவிட்டான்! — ஒன்று
தேரவும் செய்யவும் வாய்ப்பிலனாய் — இழி
பெண்மையின் நடிப்பினனாய் — ஒரு
பேடியைப் போல்இவன் வாழுகின்றான் — என
எண்ணியே வருந்துகின்றேன்! — வேறு
எதனையும் பெரிதென நினைப்பதில்லை! — இங்கு
எனக்கென எதுவுமில்லை! — இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர!

மொழியினை இழந்துவிட்டான்; — பல
மூடப்ப ழக்கங்கள் கொண்டுவிட்டான்; — வந்த
வழியினைத் துறந்துவிட்டான் — தான்
வாழ்ந்திட அடிமையாய்த் துணிந்துவிட்டான்—எனும்
பழியினை நினைத்து விட்டேன் — இப்
பாழ்மனம் எனைநொடி விடுவதில்லை — இந்த
இழிவினைத் துடைப்பதற்கே — எனை
இராப்பகல் தூண்டியே அலைக்கழிக்கும்! — வேறு
எனக்கென எதுவுமில்லை! — இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர!

அற மன்றங்கள் அல்ல!
வழக்கு மன்றங்களே!

Court-களை அறமன்றங்கள், நெறி மன்றங்கள் என்று தமிழில் மொழிபெயர்க்கின்றோம். அவை அறச்சாலைகளோ, நெறி முறை மன்றுகளோ அல்ல. வெறும் வழக்கிடு மன்றங்களே! அரசு அமைத்துக் கொடுக்கும் ஒழுங்குக்கும், வகுத்துக் கொடுக்கும் சட்டங்களுக்கும் ஏற்பவே அவை செயல்புரிய முடியும். பின்னர் வகுக்கும் சட்டங்கள் முன்னர் வகுத்துக்கொண்ட சட்டங்களுக்கு முரண்படாமல் இருப்பதை அவ்வழக்கு மன்றங்கள் கண்டு காட்டிச் சொல்லுகின்றன. அவ்வளவுதான்.

அரசவையை ஒரு மருத்துவனுக்கு ஒப்பிட்டால், வழக்கு மன்றங்களை ஒரு மருந்து கொடுப்போனுக்கு ஒப்பிடலாம். நோயாளிகளே மக்கள்! என்ன நோயாளிக்கு என்ன மருந்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை மருத்துவர் எழுதிக் கொடுப்பார்; அதன்படி மருந்து கொடுப்போன் கலக்கிக்கொடுப்பான். மருத்துவர் எழுதிக் கொடுத்த நோயையோ, மருந்தையோ, ஆய்வதற்கோ அவற்றைத் தவறு என்று சொல்வதற்கோ அவனுக்கு அதிகாரமில்லை. அது மருத்துவர் வேலை. அவனுக்கு மருத்துவர் கூற்றுப்படி நோயாளியிடம் மருந்தைக் கொடுத்துப் போகச் செய்வதே! வேண்டுமானால் அம்மருந்தை உண்ணும் முறைகளைச் சொல்லி, நோயாளியை எச்சரித்து அனுப்பலாம்!

இப்பொழுது சொல்லுங்கள்; வழக்கு மன்றங்களுக்கும் மருந்து கொடுப்போனுக்கும் ஏதேனும் வேறுபாடுகள் உள்ளனவா என்று! எனவே, அரசு அமைத்துக் கொடுக்கும் சட்டத்தின்படி செயற்படும் அதிகாரத்தை மட்டும் கொண்டுள்ள வழக்கு மன்றங்கள் அறமன்றங்கள் ஆகவே ஆகா!

—பெசின்.

"தமிழ்ச்சிட்டு"

சென்னை - 5.

	உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடு
ஆண்டுக்கட்டணம் உருபா	4-00	9-00	9-00
தனியிதழ் ,,	0-35	0-75	0-75

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் எழுதிக் கேட்க!

தமிழ் முழக்கஞ் செய்க!

தமிழரெல்லாம் 'தமிழ்'என்னும் ஒருகூட் டுக்குள்
தமையிணைத்துக் கொளல்வேண்டும்; தாம்தாம் கொண்ட
உமிழுநிலைப் பிறப்புக்கும் வேற்று மைக்கும்
உளமொப்பக் கூடாது; தமிழர் ஒன்றே!
கமழுமின வொற்றுமையை மொழியால் பேணிக்
காத்திடுதல் அன்றோயிவ் வியற்கைக் கொள்கை!
இமிழ்கடல்சூழ் உலகெங்கும் போய்வாழ்ந் தாலும்
எந்தமிழர் தமிழ்மொழியால் இணைந்து கொள்க!

ஆங்கிலத்தைப் பிறமொழியைத் தமிழ்கல் லாத
அயலவர்தம் பாங்கில்உரை யாடற் கன்றி,
எங்கினிமேல் தம்மவர்க்குள் பயன்ப டுத்தல்
இல்லையெனும் உறுதிமொழி தமிழர் கொள்க!
தூங்கியதால், மொழிதாழ்ந்தே இனத்தைத் தாழ்த்தும்
தொலையாத இடர்ப்பாடு போதும் என்க!
தேங்குவது கூடாது! பிறர்போல்| நாமும்
தீங்கின்றித் தாய்மொழியைக் காத்தல் வேண்டும்

தமிழர்க்குத் தமிழேதாய் மொழியாம்; அந்தத்
தாய்மொழியை நாம்துறந்தால் தமிழர் ஆமோ?
தமிழின்றித் தமிழினமும் இல்லை யன்றோ?
தமிழ்பற்றிக் கவலாதார் எண்ணிப் பார்க்க!
தமிழர்க்குப் பிறமொழியைக் கற்குந் தேவை
தள்ளாத தேவையெனில் கற்க! ஆனால்,
தமிழினத்துள் தமிழ்நிலத்துள் தமிழ்கல் லாத
தமிழர்களை அயலார்க்கே பிறந்தார் என்க!

கட்சிகளைத் தவிர்த்திடுக! 'சாதி' என்னும்
கண்மூடிப் பிரிவுகளைப் புதைத்தொ ழிக்க!
எச்சமயத் தும்'தமிழர்' என்றே தம்மின்
இனப்பெயரை மொழியாலே தெரியச் சொல்க!

நச்சுயிர்கள் போலினத்தை அழிக்கும் மூட
நயவஞ்சக் கொள்கைகளை விழாக்கள் தம்மை
எச்சிலிலை ஈக்களைப்போல் மொய்த்துக் கேட்கும்
'இதிகாசம்' 'புராணத்தை'த் தவிர்த்தல் செய்க!

தமிழ்மகளிர் செந்தமிழ்மேல் பற்றுக் கொண்ட
தமிழரையே மணஞ்செய்க! இளைஞர் தாமும்
தமிழ்நலஞ்செய் பெண்டிரையே மணந்து கொள்க!
தமிழறியார் தமிழ்க்குநலஞ் செய்யார் அன்றோ?
தமிழ்நலத்தைக் காவாத எழுத்தா ளர்கள்
தாமெழுதும் நூற்களையும் தவிர்த்தல் செய்க!
நமிலுயர்வு தாழ்வகற்றி ஒருங்கி ணைக்கும்
நல்லறிஞர் உரைகளையே போற்றிக் கொள்க!

வானொலியில் திரைப்படத்தில் தமிழ்ப்பே ணாத
வரலாறு, கதை,பாடல் வருதல் கண்டால்,
கூனொலியைக் கேட்காமல், படம்பார்க் காமல்
கொள்கைக்குப் போரிடுக! தமிழைக் காக்க!
தேனளிக்குஞ் சுவையிணையும் எள்ளல் செய்யும்
செந்தமிழின் தனிச்சுவையைப் பழிக்கு மாறு
வீணொலிக்கும் இரைச்சலுக்கும் பொழுதைப் போக்கும்
வீணர்தம் போக்கிற்குத் தடையாய் நிற்க!

தமிழ்மொழியைத் தாழ்த்துகின்ற வரலா றெல்லாம்
தவிடுபொடி யாக்கிடுக! தமிழர் பாங்கில்
தமிழ்நலத்தைப் பேணாத தலைவர் தம்மைத்
தமிழ்நிலத்துப் புறக்கணிக்க! பொதுமை பேசித்
தமிழ்மொழியைப் பழித்திடுவார் தம்மால் இங்குத்
தமிழர்க்குக் கேடல்லால் நலன்கள் இல்லை!
தமிழ்நாட்டின் தெருவெல்லாம் மனைகள் எல்லாம்
தமிழ்முழங்கச் செய்திடுவீர் தமிழ்நாட் டீரே!

பிழை திருத்தம்

சென்ற தமிழ்ச்சிட்டு குரல் 8. இசை 12 இதழில் சிறப்பு மடல் எண்: 484 என அச்சாகி யிருப்பதை, எண்: 488 என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறோம். (ஆ-ர்.)

கோவைக் கடைக்காரர்கள் வாழ்க!

கோவையிலுள்ள தென்மொழி இயக்கக் கிளைகளான சேரர் கொற்றம், ஆலாந்துறை, தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆகிய தனித்தமிழ்க் கழகங்களின் பெரு முயற்சியாலும், மாணவர்களின் ஒத்துழைப்பாலும் இதுவரை கோவைத் தெருக்களில் உள்ள நானூற்றுக்கும் மேற்பட்ட கடைகளில் உள்ள பெயர்ப் பலகைகள் தூய தமிழாக மாற்றப்பட்ட செய்தியைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (அக்கிளைகளின் இறுதியறிக்கை இவ்விதழின் வேறு பக்கங்களில் அச்சிடப் பெற்றுள்ளது.) தமிழக அரசு தமிழகத்திலுள்ள அனைத்துக் கடைகளின் விளம்பரப் பலகைகளும், தூய தமிழில் மிளிர்தல் வேண்டும் என்று வேண்டுகோள் விட்டிருந்தாலும், கட்டளையாக அஃது இல்லை என்னும் கரணியங் காட்டிப் பல கடைக்காரர்கள் தம் கடைகளின் விளம்பரப் பலகைகளைத் தமிழ்ப்படுத்த மறுக்கின்றார்கள் என்னும் ஒரு செய்தியை அக் கிளைக் கழகங்கள் நமக்கு அறிவித்துள்ளன. இத்தகைய முயற்சியில் ஆங்காங்குள்ள நம் தனித்தமிழ் அன்பர்கள் அத்தகைய கடைக்காரர்களை அணுகி, அவர்களுக்கு விளம்பரப் பலகைத் தமிழ்ப்படுத்தத்தின் இன்றியமையாமையை அன்புடன் எடுத்துக் கூறி, இம் முயற்சியில் வெற்றி பெறுமாறு வேண்டிக் கொள்கின்றோம். அத்துடன் இம் முயற்சிக்கு ஒத்துழைத்துத் தம் தம் விளம்பரப் பலகைகளைத் தமிழ்ப்படுத்திய கோவைக் கடைக்காரர்களுக்கு நம் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் இம்முயற்சியில் ஈடுபட்ட அன்பர் அனைவரையும் பாராட்டுகின்றோம். கோவைத் தெருக்களில் உள்ள கடைகளின் தமிழ்ப்படுத்திய பெயர்களில் சிலவற்றைப் பிறரும் பின்பற்றுவதன் பொருட்டுக் கீழே தந்துள்ளோம். அன்பர்கள் இவற்றைக் கவனிக்கக் கேட்டுக் கொள்கின்றோம்.

1.	குவாலியர் உடுப்புகள் கண்காணி விற்பனையகத்தார்,	ஒப்பனைக்காரத் தெரு.
2.	மகாலக்குமி வெள்ளிரும்பு மாளிகை,	அரசத் தெரு
3.	அமிர்தலால், குழுமம்,	ஒப்பனைக்காரத் தெரு.
4.	புக்ராசு நூற்பகத்தார்,	,,
5.	பாப்புலர் மின்திறலார்,	,,
6.	வெங்கடாசலபதி, மகார்,	,,
7.	தோட்டான், பிறந்தையர்,	அரசத் தெரு.
8.	மகேந்திரா பொதுப்பண்டகம்,	,,
9.	இராமகிருட்டிண அடுமனை,	குறுக்கு வெட்டுச்சாலை.
10.	பீ. சு. இரா. அழகு மாளிகை,	மேட்டுப்பாளையச் சாலை

தமிழ்ச்சங்கம், காரைக்குடி.

கல்லூரி, பல்கலைக் கழக மாணவர்

கட்டுரை, பாடற் போட்டிகள்.

அறிவிப்பு.

'எல்லாக் கலைகளையும் சொல்லும் வன்மை தமிழுக்கு உண்டு' என்னும் நோக்கத்தோடு, தமிழ்ச் சங்கம் பத்துத் துறைகளில் அறிவியற் போட்டிகள் வைத்து இளைஞர்களிடைத் தமிழாற்றலை வளர்த்து வருவதையும், அவற்றிற்குப் பல பரிசுகள் வழங்கி வருவதையும் நாடு நன்கறியும்.

தமிழ் மொழியின், தமிழ் இனத்தின், தமிழ் நாகரிகத்தின் தனிக் களஞ்சியங்கள் கழக இலக்கிபங்களேயாகும். எந்தப் பிற தமிழ் இலக்கிபம் படித்தும் கழக இலக்கிபம் படியாதவர் தமிழ் அறிந்தவராகார். பிற தமிழ் இலக்கிபங்கள் படியாது கழக இலக்கியம் மட்டும் படித்தவரும், தமிழ் அறிபாதவராகார். தமிழர்க்கு இலக்கியம் எனப் படுபவை கழக இலக்கிபங்களே. இவ்வுண்மையைப் பரப்பும் குறிக் கோளுடன் கழக இலக்கியத்தில் இருவகைப் பரிசுப் போட்டிகள் நடத்தத் தமிழ்க் கழகம் முன் வருகிறது.

க. கழக இலக்கிய ஆய்வுக் கட்டுரைப் போட்டிகள்

தலைப்புகள் :
1. தொல்காப்பியம் காட்டும் குறிக்கோள்கள்.
2. அகத்திணை மாந்தர்களுள் தலைமைக்குரியவள் தலைவியே.
3. சங்கத் தமிழரின் கடவுள் நெறிகள்.

மேற்கண்டவற்றுள் ஒரு தலைப்புப்பற்றித் திறனாய்வு முறையில் கட்டுரை முழு நீளத்தாளில் பத்துப் பக்க அளவில் இருத்தல் வேண்டும். மறுபக்கம் எழுதற்க. (தொடர்ச்சி அடுத்த பக்கம்)

11.	நாதன் புகைப்பட நிலையம்,	திருச்சிப் பாதை.
12.	கண்ணன்தேவன் தேயிலைக் குழுமம்,	இர. ச. புரம்.
13.	சிவக்குமார், தையலகம்.	,,
14.	புதிய கண்ணன் குளம்பிக்குழுமம்,	,,
15.	தேவி உணவகம்.	புகைவண்டி நிலையம்.
16.	கான்பூர் காலணி மாளிகை,	பெரிய கடைத்தெரு.
17.	பரணி மளிகை,	அரங்கே கவுடர் தெரு.
13	நெல்லை மிட்டாய் நிலையம்,	அவிநாசிச் சாலை.
19.	சுரேசு அங்காடி,	அரசத் தெரு.
20	செல்வி முடி திருத்தகம்,	ஒப்பணைக்காரத் தெரு.
21.	சந்தோசு மருந்தகம்,	,,
22.	திரு. உடுப்பி உணவு விடுதி,	குறுக்கு வெட்டுச்சாலை.
23.	சுதேசிக் கண்ணாடி மாளிகை,	அரசத் தெரு.

உ. கழக இலக்கியத் துறைப் பாடற் போட்டிகள்

தலைப்புகள் : 1. பாங்கன் கழறல். 2. உடன் போக்கு.
3. கற்பொழுக்கத்தில் தோழி தலைவியை ஆற்றுவித்தல்.
4. வஞ்சினம். 5. கையறு நிலை.

மேற்கண்ட ஐந்து துறைகளிலும் பழைய இலக்கண மரபில், இக்காலத்திற்கேற்ற சூழ்நிலையும் புனைவும் உவமையும் விரவ ஆசிரியப்பாவில் ஒவ்வொன்றும் பதினைந்து அல்லது இருபது அடி எல்லைக்குள் ஐந்து பாடல்கள் தனித் தனியாக இயற்றுதல் வேண்டும். ஒவ்வொரு செய்யுளும் தனி முழுத்தாளில் இருத்தல் வேண்டும். மறுபக்கம் எழுதற்க.

நெறி முறைகள்:

க. கல்லூரி, பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பில் மூன்றும் ஆண்டு பயிலும் எல்லாத் துறை மாணவர்களும், முதுகலை பயிலும் எல்லாத் துறை மாணவர்களும், புலவர் மூன்றும் நான்காமாண்டு பயிலும் மாணவர்களும் இவ்விருவகைப் போட்டியிலும் கலந்து கொள்ளற் குரியர்.

உ. பிற எழுத்துக் கலப்பும் பிற மொழிக் கலப்பும் ஆகிய கலப்புத் தமிழ் கூடாது.

ங. மாணவர் பெயர், வகுப்பு, துறை, தலைப்பு, கல்லூரி முகவரி, நிலையான இல்ல முகவரி இவற்றைத் தனித்தாளில் எழுதித் தமிழ்த் துறைப் பேராசிரியர் ஒப்பம் பெற்றுக் கட்டுரை அல்லது —பாடலுடன் இணைத்து விடுக.

ச. ஒருவர் இருவகைப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம்.

ரு. ஒவ்வொரு வகைக்கும் முதற் பரிசு (நூல்களாக) உரு: 50 இரண்டாம் பரிசு (நூல்களாக) உரு: 30. மூன்றும் பரிசு (நூல் களாக) உரு: 20. தக்க பிற கட்டுரைகளுக்கும் பாடல்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

சு. பரிசுகள் - சான்றிதழ்கள் பெறும் கட்டுரைகளும் பாடல் களும் கழகத்திற்கு உடைமைகளாகும்.

எ. நடுவர் தீர்ப்பே முடிவானது.

அ. கட்டுரைகளையும் பாடல்களையம் 1976 பிப்பிரவரிக் நள், 'செயலர், தமிழ்ச் சங்கம், 17-கல்லுக்கட்டி மேற்கு, காரைக்குடி-1. என்னும் முகவரிக்கு விடுக்க வேண்டும்.

தலைவர் : பர். வ. சுப மாணிக்கனர்.
துணைத் தலைவர் : பர். இரா. சாரங்கபாணி.
செயலர் : மா. அ. ஞானசேகர பாண்டியன்

புலமை

பல்கலைக் காலாண்டு இதழ்.

சிறப்பாசிரியர் :

பர். பொற்கோ.

ஆசிரியர் :

மு. கந்தசாமி, க. இ. ஆ. ப.

0 சனவரி, ஏப்பிரல், சூலை, அக்டோபர் ஆகிய மாதங்களில் (100-150 பக்க அளவில்) ஆண்டுக்கு நான்கு முறை வருகிறது.

0 ஒவ்வோர் இதழிலும் தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், மொழியியல், வரலாறு, கல்வெட்டுத் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்து கொண்டுள்ளன.

உறுப்பினர் தொகை ;

ஆண்டுக் கட்டணம் உரு: 20—00. தனியிதழ், உரு: 6—00

தொடர்புக்கு :

புலமை.

10. இ. பீமண்ண முதலி தோட்டத் தெரு,

ஆழ்வார்பேட்டை, சென்னை-600018.

பெரியபுராண ஆய்வுரை

ஆசிரியர் :

மறைமலையடிகள் மகனார்,

திருமுறைச்செல்வர், பேராசிரியர்,

மறை. திருநாவுக்கரசு.

0 இவ்வெளியீட்டு வரிசையில் இதுவரை சுந்தரர், அப்பர், சம்பந்தர் பற்றி மூன்று ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.

0 தொகுதி ஒவ்வொன்றும் 10 உருபா விலை கொண்டது. அஞ்சல் செலவு தனி.

தொகுதிகள் கிடைக்குமிடம் :

மறைமலையடிகள் பதிப்பகம்,

பி. 96, சவகர் நகர், அகரம், பெரம்பூர், சென்னை-82.

தமிழோசை

சிறப்பாசிரியர் : த. ச. தமிழன்.

0 இம்மாத — திசம்பர் — இதழ் சில கரணியங்களால் தேங்கி, சனவரித் திங்களில் வெளிவரும் என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழோசை

இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.

தென்மொழியிலிருந்து இன்றுவரை கிடைக்கப்பெறும் தமிழ்ச்சிட்டு களிலிருந்தும், அறிந்தும் மெய்யன்பர்கள் கூறிடக் கேட்டும் உண்மையறிபவன். ஆகையால் தங்களை ஆசானாக ஏற்றுக்கொண் டேன். அதனால் பெருமையும் அடைகிறேன்.

அறிஞர்களையும், அவர்கள் ஆய்ந்து அளிக்கும் கருத்துகளையும் மக்களினம் ஏற்றுக்கொள்ளவே மறுக்கின்றனர்: அவ்வழியில் தங் களையும் நம் மக்கள் எண்ணிவிடுகின்றனர் என்று மனம் நொந்து தங்களின் அறிவுரையாலேயே ஆறுதல் அடைகிறேன். பல்லாண்டு -கள் கழிந்தேனும் தங்களின் இணையற்ற கருத்துப்படி நடந்து தமிழ் இனம் முன்னேற்றம் அடைய இறைவனை இறைஞ்சுகிறேன். தமிழைப் பேணுவதாகச் சொல்லும் தமிழக அரசும் தங்களை ஒதுக்கு வது கண்டு இறைவன்தான் தங்களை எல்லாவகையிலும் நலம்பெற அருள்புரியவேண்டும் என்று மனமார வேண்டுகிறேன். என்போன்ற எளிய நிலையில் உள்ள அன்பர்கள் இருக்கும்வரை தங்கள் கொள்கை -களை உயிர்மூச்சு எனக் கொள்வோம் என உறுதியளிக்கிறேன்.

அன்புத்தொண்டன், — துள. அரிமாவளவன், புதுவை-6.

0 : 492 : தென்மொழி ஐயா, வணக்கம்! நான் நலம்; தமிழ் நலமில்லை. தமிழ் நலமில்லாமைக்குக் கரணியம், தமிழரின் தன்மானமிலாத் தன்மையும், வீடணப் பிரகலாத-எட்டப்ப வேலையும் என்பது அன்று தொட்டு இன்றுவரை வரலாறு காட்டும் உண்மை! தமிழர்கள் அன்று தொட்டு இன்றுவரை செய்த தவற்றையே செய்து வருகின்றனர். அஃதாவது, சேர, சோழ, பாண்டியர் தத்தமக்குள் போரிட்டுக் கொண்டனர். அன்று அவர்கள் மட்டும் ஒன்றுபட்டு, மொழிமேல் விழி வைத்து இருப்பரேல், இன்று நம் அருந்தமிழ் ‘உலக மொழி’யாய் விளங்கி இருக்கும். பழங்கதைபேசிப் பயனில்லை. தமிழ்ச்சிட்டு கண்டேன். அதில் ....மடல்களைக்கண்டேன். தமிழனைத் தாழ்த்த தமிழனே கருவியாய் அமைவது, வேறு எம் மொழியானிடத்தும் காணாத பெருஞ் சிறப்பாகும்(!). மடல்களில் ஓரிடத்தில் “அவன் நாக்கு அழுகிப் போய்விடும்; அவன் பிள்ளைகள் தெருவில் அனாதைகளாய் (ஏதிலிகளாய்) நிற்கும்” என்பதை மட்டும் படித்தேன் ஐயா! அடுத்த வரி படிக்க என் நா எழவில்லை. விழிகள் விழிப்பின்றி நீரில் மூழ்கின. “அவன் மனைவி.................” என்ற சொற்றொடர் என் நெஞ்சினைப் பிளந்தது. “தமிழுக்குத் தொண்டு செய்தோன் செத்ததில்லை” என்ற முன்னவன் மெய்ச்சொல் செத் ததோ! ஆனால் இதன் வழி ஒரு மெய்ம்மம் (தத்துவம்) உணர்ந்தேன். அஃது என்னவெனின், “ஒருவனின் சொல்லும் செயலும் அவனின் தகுதியைக் காட்டுவன” என்பதுதான்.

எனவே, இனிமேல் செய்யவேண்டுவது ஒன்று! தமிழே (!) படித்த தமிழாசிரியர்களே, தனித்தமிழ்ப் பற்றின்றி இருத்தல் வருத் தத்திற் குரித்து. தமிழாசிரியர்கள் மட்டும் தமிழ்க் கொள்கையினை யும் – தனித் தமிழினையும் மாணவர் வழிப் புகுத்துவராயின், இனி வரும் குமுகாயமாவது ஓரளவு விழிப்படையும்! தமிழாசிரியப் பெரு மக்களைப் பெரிதும் வணங்கி, இத்தொண்டினைச் செய்ய வேண்டு கிறேன். ‘கூழுக்குப் பாடாதீர்’ என வேண்டுகிறேன்!

எம்பள்ளியில் மாணவர் தனித் தமிழ்மேல் விழைவுகொண்டு கற்கின்றனர். நான் பணிபுரியும் பகுதி தெலுங்குப் பகுதியாய்

(தொடர்ச்சி மறுபக்கம் பார்க்க.)

இருந்தும் இத்தன்மைய தமிழ்த் தம்பிகள், தங்கைகள் வளர்கின் றனர் எனின் பிற பகுதியில் இதனினும் செழித்தல் வேண்டாவா? 'தமிழ்ச்சிட்டு' பறக்க, பரவ, தமிழாசிரியரனைவரும் துணை நிற்றல் வேணடும்! —புலவர். மு. ஆறுமுகம், கொட்டமிட்டா.

0 : 493 : என்மொழி என்இனம் என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன்.........

என்று ஏட்டில் எழுதியதோடு நில்லாமல், நாட்டு மக்கள் அறிந்து உணரும் வண்ணம் மூன்று .... மாநாடுகளை இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை போட்டு நடத்திக் காட்டிய என்றமிழ்த் தலைவனே! வணங்குகிறேன். வணங்கி மகிழ்கிறேன். மதிப்பிற்குரிய தந்தை பெரியாரும், அண்ணாவும், பாரதிதாசனும் .... உணர் வினை ஏட்டில் எழுதி உணர்வூட்டிச் சென்றார்களேயன்றிச் செயல் படுத்திக் காட்ட முனையவில்லை, முயலவில்லை. இந்நிலையை இங்குள தமிழர்கள் சிறிது எண்ணிப் பார்ப்பார்களேயானால், தங்களின் .... உணர்வையும், வினைத் திறனையும் தெள்ளிதின் அறிந்து கொள்ள இயலும்.

ஈழத் தமிழனும், இலண்டன் தமிழனும், இன்னபிற மாநிலத் தமிழனும் உணர்வுத் துடிப்புடன் விழிப்பு நிலையில் எழுச்சிக் குர விடும்போது, இங்குள தமிழர்க்கு இற்றுப்போன மான உணர்வினை ஒற்றுமை யின்மையை கண்ணுறும்போது, தாங்கள் எழுதிய 'ஒருவனை ஒருவன் ஏய்ப்பான்; ஒருவனை ஒருவன் சாய்ப்பான்; உரு வாகித் திரளும்போழ்தில் ஒருவனை ஒருவன் மாய்ப்பான்!' எனும் தமிழர் தம் நெஞ்சத்தை படம்பிடித்துக் காட்டும் தொடர் பாடல் வரி தான் நினைவிற்கு வருகின்றது. தமிழ்நாட்டை .... பார்த் திருந்தும், தமிழ்மொழியில் பிறமொழி விரவக்கண்டும், தமி ழினத்தை பிறர் தூற்றி இழிக்கக்கண்டும், அவ்வகையினோர்க்கு விடையேதும் பகராது ஏதிலியாய், அடிமை விலங்காய் அலைந்துழ லும தமிழர்கள் உணர்வுறும் நாள் எந்நாளோ? தங்களின் தாழ்வு நிலையறிந்தும் பொங்கியெழாத் தமிழர்களின் வாழ்வு மங்கிப் பாழ் பட்டுத் தேங்கி, ஏக்கமுற்று வாட்டமுடன் கூட்டமாக நாயினும் கிழாய் நடுத்தெருவில் அலைகின்ற என்றமிழர் சாகின்ற நிலையினுக் குச் சாவுமணி அடிப்பதுபோல் ....விலங்குகளுக்குக் கூவிக் குரலிட்ட விடுதலைப் பாவல! நின்னையன்றி வேறெவரோ ....ப் பெற இயலும்.

தமிழ் நலம் காக்கவும், தமிழர் நலம் மீட்கவும், தமிழ்க் குலம் தழைத்தினிது ஓங்கிடவும் தாங்கள்தான் முன்னிருந்து வழிகாட்டிச் செலல் வேண்டும். தங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி .... முழக்கமிடக் கொள்கை மறவர் பலருள்ளனர். தொடர்ந்து நடை யிடுங்கள், வித்திட்ட கொள்கை உணர்வை வளர்த்திடுங்கள்.

—சு. நற்குமரன், வழுவூர். மயிலாடுதுறை.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.